# வாழ்த்துமழை



உவமைக்கவிஞர்

## சுரதா



மணிவாசகர் பதிப்பகம்



# வாழ்த்து மழை

உவமைக்கவிஞர் சுரதா

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : மார்ச், 2010
திருவள்ளுவர் ஆண்டு : 2041

**விலை : ரூ. 70.00**

மொத்தப் பக்கங்கள் : 128

அளவு (டெம்மி) 1 x 8

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1689

முகப்பு அட்டை மற்றும்
பக்க வடிவமைப்பு:
முத்து ஆர்ட்ஸ்
சென்னை.



நினைவில் வாழும் நிறுவனர்
ச. மெய்யப்பனார்

அண்ணாமலைப்
பல்கலைக் கழக
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கழகங்கள்
பலவற்றில் அறக் கட்டளைகள்
நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின்
நிறுவன ஆசிரியர்.
குன்றக்குடி அடிகளார்
'தமிழவேள்' என்றும்,
தருமபுரம் ஆதீனத் தலைவர்
'செந்தமிழ்க் காவலர்' என்றும்
விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.
'பதிப்புச் செம்மல்' என
அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

**நூல்கள் கிடைக்குமிடம்:**

**மணிவாசகர் நூலகம்**

12–B, மேலச் சன்னதி,
சிதம்பரம் – 608001.
தொலைபேசி: 230069

31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை – 600108.
தொலைபேசி: 25361039

6, சிவஞானம் தெரு,
தி.நகர், சென்னை – 600017.
தொலைபேசி: 24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை – 625001.
தொலைபேசி: 2622853

15, ராஜ வீதி,
கோயமுத்தூர் – 641001.
தொலைபேசி: 2397155

78, செரி சாலை,
சேலம் – 636001.
தொலைபேசி: 3207722

28, நந்தி கோயில் தெரு,
திருச்சி – 620002.
தொலைபேசி: 2706450

---

அச்சிட்டோர்: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை–600 021.
தொலைபேசி: 25954528

# இசை ஒலி!

பாடுகின்ற குரல்படைத்த தோழர்; நல்ல
பாட்டெழுதும் திறனுடையார் புகழ்ந்து பேசும்
நாடகங்கள் எழுதுகின்ற சக்தி வாய்ந்த
நாகை இரா. சண்முகத்தின் மேடைப் பாடல்
ஏடுதனை வாசித்தேன் யாவும் தேன்! தேன்!
இந்நூலைக் கதம்பமலர்ச் செண்டென் பேன்யான்.
பாடுபட்டுச் சிந்தித்த புதிய எண்ணம்
பாடல்களில் இருப்பதைப்பா ராட்டு கின்றேன்.

■ *நாகை. இரா. சண்முகம் எழுதிய 'இசை ஒலி' என்னும் நூலுக்கு 1953 - இல் வழங்கிய அணிந்துரை.*

# துறவி !

துறவிஎன் னும்இந் நூலோர்
 தொடர்கதை விளக்கம், நூலில்
அறந்தனை விளக்கு கின்றார்
 அச்சாணிச் சொற்க ளாலே!
புறப்பொருள் கவிஞர் போன்று
 புதுப்புது உவமை மூலம்
திறமையைக் காட்டி யுள்ளார்
 செந்தமிழ் மழலைப் பித்தன்.

கதைதனைக் கூறும் இந்தக்
 கவிதைநூல் தன்னில், சொந்தப்
புதுமையைக் காணு கின்றேன்.
 அன்னைபோல் பூரிக் கின்றேன்.
முதிர்ந்ததோர் பழத்தின் வித்து
 முளைத்திடின் செழிப்பைக் காட்டும்.
அதுபோன்ற செழிப்பே, ஏட்டில்
 அடங்கிய பாட்டின் கூட்டம்!

புதுமைதான் புகழின் கோடு;
புதுமைதான் வளரும் வாழ்க்கை;
புதுமைதான் உணர்வைத் தூண்டும்;
புதுமைதான் பாட்டில் வேண்டும்;
புதுமையின் கருத்து இன்றிப்
பாடுதல் பழைமை யான
பதுமைக்குப் பட்டு டுத்துப்
பார்ப்பது போன்ற தாகும்.

கவிதையில் கருத்து வேண்டும்
கட்டாயம் உவமை வேண்டும்.
உவமைதான் கவிதை கட்கு
உயிர்நாடி, பெருமை சேர்க்கும்.
உவமையில் லாத பாடல்
உப்புசே ராத பண்டம்!
அவிழ்ந்திடா தாம ரைப்பூ!
அழகுஇல் லாத மங்கை!

சிவந்திட்ட கனியைத் தின்னும்
சிங்காரக் கிளியின் மூக்கை,
பவளத்தின் வளைவு என்று
பகரலாம்—பகர்ந்திட் டாலும்
அவரைப்பூ போன்றி ருக்கும்
அதன்மூக்கு என்று சொன்னால்
சுவையாக இருக்கும்; செய்தோன்
திறமையும் விளக்க மாகும்.

பிடிபடும் மானைப் போன்ற
பெண்களின் வாழைத் தண்டுத்
தொடைதனைப் பார்ப்ப தன்றி
தேமழர்கள் யாப்பு நூலின்
தொடைதனைப் பார்ப்ப தில்லை;
தோகையர் எடுத்து ஊன்றும்
அடிதனைப் பார்ப்ப தன்றி
அணியியல் பார்ப்ப தில்லை.

எழுச்சிதான் வேண்டும் பாட்டு
எழுதிட, இதனை விட்டு
எழுத்தசை காய்ச்சீர் போன்ற
இழவெலாம் எதற்கு? வேண்டாம்,
கிழித்தெறி இலக்க ணத்தை
என்பவர் தமிழின் கீர்த்தி
அழிப்பதற் காகப் போடும்
அறிவிலா உதட்டின் ஓசை.

பாட்டுக்குச் சட்டம் வேண்டாம்
என்பவர் தம்மூக் குக்கு
ஓட்டையே வேண்டாம் என்று
உரைப்பது போன்ற வாதம்.
வீட்டுக்கு வாயில் ஒன்று
வேண்டாமா? வேண்டும் என்றால்,
பாட்டுக்கும் சட்டம் வேண்டும்;
அதனைப்பின் பற்றி யுள்ளார்.

எருக்கம்பூக் கவிதை நூற்கள்
வளர்கின்ற இந்த நாளில்
சிரிக்கும்ஓர் அல்லி நூலைச்
சிந்தித்துத் தந்து உள்ளார்.
நரிப்பல்என் செய்யும், இந்த
நல்யானைப் பல்லின் முன்னால்?
விருத்தத்தால் ஆன இந்நூல்,
விவேகத்தை வளர்க்கும் பொன்னூல்.

பழமைக்கு வேட்டு வைக்கும்
பாட்டுநூல் நமக்கு வேண்டும்
கிழச்சொற்கள் வீழ்தல் வேண்டும்
கீர்த்திசொல் வளர்தல் வேண்டும்
பழச்சாறு போன்ற பாடல்
பத்தினி போன்று வேண்டும்
எழுச்சியைத் தூண்டு தற்கு
இதுபோன்ற நூற்கள் வேண்டும்!

---

■ *கவிஞர் மழலைப்பித்தன் எழுதிய 'துறவி' என்னும் நூலுக்கு 1957 - இல் வழங்கிய அணிந்துரை.*

# தேக மனோதத்துவ ஞானக் களஞ்சியம்!

யோகத்தில் வெற்றிபெறத் தக்க தான
யோசனைகள் கூறும்நூல் இங்கே உண்டு.
தேகத்தின் உறுப்புநலம் பற்றிக் கூறும்
செய்யுட்கள் ஏராளம் தமிழில் உண்டு.
தேகமனோ தத்துவநுட் பத்தைப் பற்றித்
தெரிவிக்கும் புத்தகங்கள் அதிகமில்லை.
நாகரிகம், தேகமனோ தத்து வத்தை
நன்கறிந்து வாழ்வதிற்றான் மலரக் கூடும்.

அத்தகைய தத்துவத்தை ஆணும் பெண்ணும்
அறிந்திடவும், அறிந்துபயன் பெறவும், இந்தப்
புத்தகத்தை எழுதியுள்ள வெங்கட் ராவோ
புகழ்பெற்ற எழுத்தாளர். இந்நூல் போலே
எத்தனையோ நூற்களினித் தோன்றி னாலும்
இந்நூலே அவற்றுக்குத் தாய்நூ லாகும்.
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் வெங்கட் ராவின்
சாதனைக்கோர் அடையாளம் இந்நூ லாகும்.

பாரசிகக் கவிஞன்பிர் தோசி என்பான்
பளிச்சென்று புகழ்பெற்றான் தகுதி யாலே!
ஊருக்கும் உலகுக்கும் தேவை யான
ஒப்பற்ற இந்நூலின் மூல மாகப்
பேரறிஞர் வெங்கட்ராவ் அவனைப் போலே
பெரும்புகழுக் குரியவராய் விட்டார் என்பேன்.
நேரசையும் நேரசையும் தேமா என்பர்.
நிச்சயமாய் இந்நூலும் தேமா என்பேன்.

---

■ கே.வெங்கட்ராவ் எழுதிய எழுதிய 'தேக மனோதத்துவ ஞானக் களஞ்சியம்' என்னும் நூலுக்கு 1972இல் வழங்கிய அணிந்துரை.

# பனித்துளிகள் !

உதய சூரியன் எழுந்தால் உலகினில்
ஒருநாள் உருவாகும்—நம்
இதய சூரியன் எழுந்தால் சிறந்த
இலக்கியம் உருவாகும்.

ஒருசிலர் கவிதை சருகு போல
உலர்ந்து போவதுண்டு – நாட்டில்
ஒருசிலர் கவிதை உதய சூரியன்
ஒளிபோல் ஆவதுண்டு.

அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும்
அறிஞர்கள் ஆவதில்லை—கவி
வரிசையில் நிற்பவர் அத்தனை பேரும்
வான்புகழ் பெறுவதில்லை.

முத்தமிழ்ச் சிந்தனை முருகு சுந்தரம்
முத்தாரக் கவிஞர் —அவர்
பத்துப் பாட்டைப் போலப் பாடல்
படைக்கும் நற்கவிஞர்.

---

■ *கவிஞர் முருகுசுந்தரம் எழுதிய 'பனித்துளிகள்' என்னும் நூலுக்கு 1974-இல் வழங்கிய அணிந்துரை*

# அக்கினிக் குஞ்சுகள்!

விதைக்காக வைத்திருக்கும் செந்நெல் நன்கு
விளைந்துபயன் நிச்சயமாய்த் தருதல்போல
எதைப்பற்றி எழுதிடினும் புதுமை யாக
எழுதுவதில் வீரையன் கெட்டிக் காரர்.
கொதிக்காத தண்ணீரைக் கொதிக்க வைக்கும்
கொள்கைகளே இக்கவிஞர் கொள்கை யாகும்.
அதற்காக நான்இவரைப் போற்று கின்றேன்.
அக்கினியின் குஞ்சுகளை வரவேற் கின்றேன்.

■ *கவிஞர் உதயை. மு. வீரையன் எழுதிய 'அக்கினிக் குஞ்சுகள்' என்னும் நூலுக்கு 1974-இல் வழங்கிய அணிந்துரை*

# பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!

ஆறுகள் பலநூ றென்பர்
அகம்புறம் இரண்டே என்பர்
கூறிடும் திசைநான் கென்பர்
குவலயம் ஒன்றே என்பர்
வேறுவே றாகத் தோன்றும்
வேற்றுமை கொண்ட வாழ்வில்,
பேறுகள் பதினா றென்று
பெரியோர்கள் சொல்லு வார்கள்.

கலைபல தங்கிப் பொங்கும்
கல்வியும், மாற்றார் போற்றும்
வலிமையும், ஒவ்வோர் நாளும்
வளர்கின்ற புகழும், இன்ப
நலந்தரும் நிதியும், மற்றும்
நன்மக்கட் பேறும் சீரும்;
அலையென அலையா வாழ்வும்
அடைதற்கே அரிய தாகும்.

மற்றுள்ள பேரும் சீரும்
 வாழ்வினில் பெற்ற போதும்,
பெற்றோர்கள் குழந்தை ஒன்று
 பெறாவிடில், அவர்கட் கிங்கே
பெற்றோர்கள் என்ப தான
 பெயர்வந்து விடுவ தில்லை!
நற்றமிழ் போலும் பெற்றோர்
 நன்மக்கள் பெறுதல் வேண்டும்.

பன்மக்கட் பேறு பெற்றால்
 பட்டியல் நீள மாகும்!
நன்மக்கட் பேறு பெற்றால்
 நாட்டுக்கே பெருமை சேரும்
என்மக்கள் இவர்கள், நாங்கள்
 இவர்களைப் பெற்ற தாலே
உன்னத மடைந்தோம் என்றே
 உரைப்பது பெருமை யாகும்.

■ ராயவரம் திரு. செ.மெ.பழனியப்ப செட்டியார் (பழனியப்பா பிரதர்ஸ்) அவர்களின் மகள் செல்வி. கண்ணம்மா அவர்களின் திருமணத்தின் போது வெளியிடப்பெற்ற 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என்னும் தொகுப்பு நூலுக்கு 1974 - இல் வழங்கிய வாழ்த்துப்பா.

# என் சிந்தனைகள்!

எவருக்கும் அஞ்சாமல் எழுதிக் கொண்டே
இருக்கின்ற எழுத்தாளர் ராவன் னாவின்
தவமென்னும் முயற்சிமிகச் சிறந்த தாகும்.
தளராத புகழ்படைத்த வென்றி மாலைக்
கவிராயர் பிறப்பிடமோ, ஓய்வே இன்றிக்
கத்துகின்ற கடல்சூழ்ந்த திருச்செந் தூராம்.
அவரவரின் பண்பறிந்து நன்மை செய்யும்
ஆறுமுக நேரியிவர் சொந்த ஊராம்.

வடநாட்டில் அன்றிருந்த மீவார் ராணா
வாளேந்திப் போர்புரிந்தான். சமுதா யத்தை
எடைபோடும் எழுத்தாளர் ராவன் னாவோ,
எழுத்துப்போர் புரிந்துவரும் வீர ராவார்.
நடைமுறைக்குத் தேவையுள்ள கதைகள், நல்ல
நாடகங்கள் எழுதுவதில் சமர்த்த ரான
படைப்பாளர் என்நண்பர் ராவன் னாவின்
படைப்புக்கள் பயனுள்ள மழைநீ ராகும்!

நவசக்தி எழுத்தாளர் ராவன்னாவின்
நாவல்களும், சிறுகதையும், சிறந்த பாட்டும்,
அவரவர்க்குத் தேவையான சரக்கை யெல்லாம்
அளிப்பனவாம். அன்னாரின் 'இன்ப வேட்டை'
சுவைமிகுந்த நாகரிக நாவ லாகும்.
தோழரவர் நாடகமாம் 'பவளத் தேரோ'
புவித்தரையில் ஓடாமல், அச்ச டித்த
புத்தகத்தில் விரைந்தோடும் நவீனத் தேராம்!

ஆனானப் பட்டோரும் தம்க ருத்தை
அயலாரைக் கொண்டேதான் தொகுக்கச் செய்தார்
தானேதன் சிந்தனையைத் திரட்டி இங்கே
தனிநூலாய் வெளியிடநாம் கண்டோ மில்லை.
சேனாதி பதிக்குரிய துணிவு மிக்க
சிங்கநடை எழுத்தாளர் ராவன் னாவோ,
தானேதன் சிந்தனையைத் திரட்டி இங்கோர்
சத்துள்ள புத்தகமாய் வழங்கி யுள்ளார்.

'எனதுசிந் தனை'யென்னும் இந்த நூலை
எடுத்தெடுத்துப் பலமுறைநான் படித்துப் பார்த்தேன்.
தினைவிதைபோல் உருவத்தில் இந்நூல், மிக்க
சிறிதாக இருந்தாலும், ராவன் னாவின்
நினைவுகளின் ஓட்டத்தில் பிறந்தி ருக்கும்
நிலாவெளிச்சக் கருத்துகளை வரவேற் கின்றேன்.
அனைவர்க்கும் தேவையுள்ள நன்னூல் இந்நூல்!
ஆதலினால் நண்பரைப்பா ராட்டு கின்றேன்.

---

■ *ரர்வன்னா எழுதிய 'என் சிந்தனைகள்' என்னும் நூலுக்கு 1975 - இல் வழங்கிய அணிந்துரை.*

# மாதவி காவியம்!

இன்றுள்ள கவிஞர் தம்மை
எடைபோட்டுப் பார்ப்போ மாயின்,
பொன்னிதான் முதலில் நிற்பார்.
பொன்தானே முதலில் நிற்கும்!
அன்னவர் எழுத்தும், செய்யுள்
அலங்காரப் பேச்சும், நம்மை
பன்னீரில் குளிக்க வைக்கும்!
பசிவரின் சோறு போடும்.

மாதவி காவி யத்தை
மற்றவர் வியக்கும் வண்ணம்
நூதனப் புலவர் பொன்னி
நுணுக்கமாய் எழுதி யுள்ளார்.
ஆதலால் இந்த நூலை
அழகுற வெளியிட் டுள்ள
மாதவி கலைமன் றத்தை
மகிழ்ந்துபா ராட்டு கின்றேன்.

■ *கவிஞர் பொன்னிவளவன் எழுதிய 'மாதவி காவியம்' என்னும் நூலுக்கு 1975 - இல் வழங்கிய அணிந்துரை.*

# பூமேகம்!

நாடகங்கள், சிறுகதைகள், செய்தித் தாளில்
நல்லபல கட்டுரைகள் தீட்டி யுள்ள
ஓடைமொழிப் பேச்சாளர் லோகி தாசன்
உண்மைக்கும் நன்மைக்கும் நடுவில் நின்று,
பாடுபடும் எழுத்தாளர் ஆவார். போற்றும்
பாவேந்தர் பரம்பரையைச் சேர்ந்தோர் ஆவார்.
ஆடுகடல் முத்தமிடும் தமிழகத்தில்
அன்றாடம் தமிழ்வளர்க்கும் கவிஞ ராவார்.

விதைமுயற்சி மரமாகிப் பூத்துக் காய்த்து
விளங்குதல் போல் விளங்குவதே சிறந்த செய்யுள்.
நதிநடந்து பயன்தரல்போல் சிறந்த நூல்கள்
நமக்களிக்கும் தங்கவயல் லோகி தாசன்
புதுமுயற்சி செய்திருக்கும் பூமே கத்தில்
புதுமைபல இருப்பதனால் பூரிக் கின்றேன்.
மதிமுயற்சி உடையவராம் இலக்கியச் சித்தர்
வழங்கியநூல் வெற்றிபெற வாழ்த்து கின்றேன்.

---

■ *இலக்கியச் சித்தர் தங்கவயல் லோகிதாசன் எழுதிய 'பூமேகம்' என்னும் நூலுக்கு 1978 - இல் வழங்கிய அணிந்துரை.*

# திருப்புமுனை !

அருங்கவிஞர் அன்றிருந்த ஒட்டக் கூத்தர்
அவர்மரபில் வந்தவராம் பாவின் வேந்தர்
பெருங்கவிஞர்; உலகமகா கவிஞர்; பேசும்
பேச்சுக்கும் மூச்சுக்கும் புதிய வேகம்
தருங்கவிஞர்; அவருடைய பட்டா ளத்தில்
தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவ ராகித்
திருப்புமுனை ஏற்படுத்திக் கொண்டி ருக்கும்
தென்பொதிகை மலைக்கவிஞன் உலக நாதன்!

வீரத்தின் அடையாளம் படைக ளாகும்;
விவேகத்தின் அடையாளம் கீர்த்தி யாகும்;
ஈரத்தின் அடையாளம் தண்ணீ ராகும்;
இன்பத்தின் அடையாளம் காத லாகும்;
நேரத்தின் அடையாளம் கதிரோ னாகும்;
நினைவுகளின் அடையாளம் ஆசை யாகும்;
சாரத்தின் அடையாளம் இந்நூ லாகும்;
தன்மானம் குடிகொண்ட தமிழ்நூ லாகும்!

---

■ *மலேசியக் கவிஞர் ஐ. உலகநாதன் எழுதிய 'திருப்பமுனைகள்' என்னும் நூலுக்கு 1982 - இல் வழங்கிய அணிந்துரை.*

# சாதனைப்பூவின் சரித்திர வசந்தம்!

சந்திரன் போன்ற ராமச்
　சந்திர முதல்வர், தேர்தல்
பந்தயம் தன்னில் வென்ற
　பகீரதன். குறுக்கே நிற்கும்
நந்தியை விலகச் சொல்லும்
　நந்தனார். தம்மை நாடி
வந்தவர்க் கெல்லாம் வாரி
　வழங்கிடும் புதிய வள்ளல்.

திருப்போரூர் தன்னில் வாழ்ந்த
　சிதம்பர சாமி யாரும்,
அருட்பாவை அருளிச் செய்த
　அடிகளாம் வள்ள லாரும்,
பெரும்பாலோர்க் கன்ன மிட்டுப்
　பிறர்பசி தணித்தாற் போன்று
திருப்புகழ் எம்ஜி ஆரும்
　அத்தகு செயல்செய் கின்றார்.

வித்தைக்குப் பகைமை யான
   விசனத்தைப் பசியைப் போக்கச்
சத்துண வொவ்வோர் நாளும்
   தரப்பட்டு வருவ தாலே
எத்தகு மகிழ்ச்சி யோடே
   இளஞ்சிறார் பயில்கின் றார்கள்.
இத்தகு மாற்றத் திற்கும்
   இவரன்றோ ஆதி மூலம்!

ஊரிலும், கடல்நீர் சூழ்ந்த
   உலகிலும் கீர்த்தி பெற்ற
பாரதி பெயரால் இங்கே
   பல்கலைக் கழக மொன்றும்
பாரதி தாசன் பேரால்
   பல்கலைக் கழக மொன்றும்
சீரிய முறையில் தோன்றச்
   செய்தவர் இவரே யாவர்!

ஆந்திர கங்கை என்னும்
   கிருஷ்ணாநீர் அங்கி ருந்து
பாய்ந்திங்கு வருவ தற்கோர்
   பயனுள்ள திட்ட மிட்டார்.
பூந்தோட்ட முதல்வ ரான
   பொன்மனச் செம்மல் திட்டம்
தீந்தமிழ் நாட்டுக் கேற்ற
   சிறப்பான திட்ட மாகும்.

இமயத்தின் உச்சி மீதில்
இருக்கும்வெண் ணிலவைப் போன்ற
தமிழக முதல்வர் வாழ்க்கைச்
சரித்திரம் தன்னைச் செந்தேன்
அமுதென விரும்பும் வண்ணம்
அருமையாய் எழுதி யுள்ளார்.
சமயசஞ் சீவி போன்ற
சரித்திரம் இந்நூல் என்பேன்.

சாதித்துக் காட்டும் டாக்டர்
சகத்ரட் சனாம்என் நண்பர்
நூதனத் திறமை யோடு
நுட்பமாய் எழுதி யுள்ள
சாதனைப் பூவின் வெற்றிச்
சரித்திர வசந்தம் என்னும்
மேதினிக் குதவும் நூலை
வீட்டில்நான் படித்துப் பார்த்தேன்.

வான்புகழ்க் கவிஞ ரான
வால்ட்டர்ஸ்காட் பிறந்த நாளில்
தோன்றிய இவர் இந்நூலில்
தொகுத்துள்ள செய்தி யாவும்
ஊன்றுகோல் போன்று மாந்தர்க்
குதவிடும், எழுச்சி யூட்டும்!
மான்கொம்பு போன்ற இந்நூல்
மாந்தர்க்குப் பாதை காட்டும்!

---

■ *டாக்டர் சா. சகத்ரட்சகன் எழுதிய 'சாதனைப் பூவின் சரித்திர வசந்தம்' என்னும் நூலுக்கு 1983 - இல் வழங்கிய அணிந்துரை.*

# கடல் பூக்கள்!

தொண்டு செய்தல் ஒருவனது கடமை யாகும்.
தொண்டென்னும் சிறந்தசெயல் தியாக மாகும்.
தொண்டுசெய்வோர் அனைவருமே தொண்ட ராவர்
தொண்டர்களுள் ஒருசிலரே தலைவ ராவார்.
தொண்டுசெய்தும், அத்தொண்டைத் தொடர்ந்து செய்தும்
தூயவராய், நல்லவராய் இருப்ப தோடு
மண்டுபுகழ்க் குரியவராய் விளங்கும் அந்த
மாமனிதர் கதர்த்தொண்டர் குப்பு சாமி!

திண்ணப்பன் என்றழைக்கப் பட்டு வந்தோன்
சிவனுக்குக் கண்கொடுத்த கார ணத்தால்
கண்ணப்பன் என்றழைக்கப் பட்டான் என்பர்.
கடலூர்வாழ் கதர்க்குப்புசாமி என்பார்
தொண்டுசெய்து வருவதனால் இவரை மக்கள்
தொண்டர்குப்பு சாமியென் றழைக்கின் றார்கள்.
அண்ணன்குப்பு சாமியென்றும், சான்றோர் பல்லோர்
அறிஞர்குப்பு சாமியென்றும் அழைக்கின் றார்கள்.

தன்னலமே இல்லாத குப்பு சாமி
    தமிழர்க்குக் கிடைத்திட்ட நல்ல சாமி.
என்தலைவர் ஈரோட்டு ராம சாமி!
    இவருடைய பெருந்தலைவர் காந்தி சாமி!
அன்றுமுதல் இன்றுவரை ஒய்வே யின்றி
    அலைகடல்போல் இயங்கிக்கொண் டிருக்கும் சாமி!
தென்பொதிகைத் தென்றலைப்போல் சிறந்த சாமி
    செல்வாக்கும் நல்வாக்கும் உடைய சாமி!

ஆரணியில் பிறந்தவொரு குப்பு சாமி
    அரியபல நவீனங்கள் எழுதி இந்தத்
தரணியில் புகழ்பெற்றார், புரசைப் பாக்கம்
    தனில்வாழந்த சாமி—குப்பு சாமி யென்னும்
பேரறிஞர் தினந்தோறும் அன்ன மிட்டுப்
    பெருமைபெற்றார். இன்றிந்தக் குப்பு சாமி
ஊரினுக்கும் உலகினுக்கும் தொண்டு செய்தே
    ஒடியாத புகழ்பெற்று விளங்கு கின்றார்.

திருவேண்டும், தெள்ளியராய் ஆதல் வேண்டும்;
    சீர்திருத்தம் செய்தபடி இருத்தல் வேண்டும்;
ஒருநூறு தமிழர்களுக் கொருவ ரேனும்
    ஓங்குபுகழ் இவரைப்போல் பெறுதல் வேண்டும்.
'அருள்வேண்டும்; அவ்வுலகம் செல்ல வேண்டும்;
    அவ்விரண்டும் நான்பெறுதல் வேண்டு'மென்று
கருதாமல் தொண்டுசெய்யும் குப்பு சாமி
    காவியத்தில் இடம்பெற்று வாழ்வா ராக !

---

■ *கதர் குப்புசாமி எழுதிய 'கடல்பூக்கள்' என்னும் நூலுக்கு 1983-இல் வழங்கிய அணிந்துரை.*

# தமிழ் வாழ்த்துகிறது !

மன்னுபுகழ் அமைச்சரென வீற்றிருந்த மதியழகன்
மகளே! செங்கால்
அன்னமெனும் அருணாவே ! அடக்கமுள்ள மணமகளே
அன்புச் செல்வி!
சென்னிமலை போற்சிறந்து விளங்குகின்ற மணமகனே!
சேர லாதா!
இன்றுமுதல் இல்லறமாம் புதுவாழ்வைத் தொடங்குகின்றீர்
இரண்டு பேரும்!
திரு.வி.க நூற்றாண்டில் மணம்புரிந்து கொண்டதனால்
சிறப்புற் றீர்கள் !
பெரும்பாலோர் உங்களைப்போல் திருமணத்தில் நூற்றாண்டைப்
பின்பற் றட்டும்!
வருங்காலம் மிகச்சிறந்த பொற்கால மாகட்டும்!
வாழும் வாழ்க்கை
கரும்பாக இனிக்கட்டும்!கணியூரார் குடும்பத்தின்
கதைநீ ளட்டும்!
இயங்குகின்ற செங்கதிர்போல் இரவிலெழும் நிலவினைப்போல்
இருக்கும் நீங்கள்
பயன்படுத்தும் இல்லறத்தைத் திருக்குறளால் பயன்படுத்திப்
பசுமை கண்டு,
செயங்கொண்ட சோழனைப்போல் அண்ணாவின் ஆட்சிபோல்
சிறப்புற் றோங்கி
வயதறிய முடியாத வையகத்தில் வாழ்வாங்கு வாழ் வீராக!

---

■ *முன்னாள் அமைச்சர் மதியழகன் புதல்வி திருமணத்தையொட்டி வெளியான 'தமிழ் வாழ்த்துகிறது' என்னும் நூலுக்கு 1983 - இல் வழங்கிய வாழ்த்துப்பா.*

# இன்னொரு விடுதலை!

அன்னிபெசண்ட், மூதறிஞர் பண்டிட் குன்ஸ்ரூ,
அமெரிக்க நாட்டதிபர் ஜிம்மி கார்ட்டர்,
தென்னகத்துப் பெருநடிகர் காளியென் ரத்னம்,
சிவாஜிகணே சன்,தணிகை உலக நாதன்,
மன்னுபுகழ்க் குரியஇளங் கோவன் என்னும்
வசனகர்த்தா முதலானோர் பிறந்த நாளில்
'இன்னுமொரு விடுதலை'யென் றோர்நூல் தந்த
எழிலரசும் பிறந்திட்டார் தொண்டை நாட்டில்.

ஒவ்வொருவர் முதல்நூலே மோனை யாகும்
ஒன்றுவந்த பின்வரும்நூல் எதுகை யாகும்
அவ்வையெனும் கவிக்கிழவி பலநூல் செய்தாள்
அவற்றுளெது முதல்நூலென் றறிதற் கில்லை.
செவ்விளநீர் போன்றினிக்கும் சிந்து நூலே
சென்னிகுளக் கவிவேந்தன் முதல்நூ லாகும்
இவ்விளைஞர் முதல்நூலோர் ஆய்வு நூலாம்
இவர்வழங்கும் இந்நூலே இரண்டாம் நூலாம்.

கண்கொடுத்தும் பொன்கொடுத்தும் ஆதரித்த
 மாமல்ல புரத்துவள்ளல் செவந்தா னுக்கோ
பண்பட்ட கவிராயன் ராமச் சந்த்ரன்
 படைத்திட்டான் கோவையெனும் பிரபந் தத்தை
பெண்கொடுத்த மாமனுக்கே இந்த நூலைப்
 பெருங்கவிஞர் காணிக்கை யாக்கி யுள்ளார்
பண்பாட்டை வெளிப்படுத்திக் காட்டும் இந்தப்
 பாவலனைத் தனித்தமிழால் வாழ்த்து கின்றேன்.

'எல்லாம்நன் கறிந்தஇந்து தேசம் ஆனால்
 இப்போதோ நிலைமைமிக மோசம்' என்று
பல்லாண்டு கட்குமுன்பே பாடி யுள்ளார்
 பாஸ்கரதாஸ் எனும்கவிஞர். இந்தி யாவின்
எல்லையென இருப்துவும் கரையே, இங்கே
 எல்லாமாய் இருப்பதுவும் கறையே' என்று
பல்லவிக்கோர் பல்லவியைப் போன்று குட்டி
 பாஸ்கரதாஸ் எனுமிவரும் பாடி யுள்ளார்.

வள்ளுவரோ பிறைநிலவை 'அறுவாய்' என்றார்
 மற்றிவரோ 'மொட்டுநிலா' எனச்சொல் கின்றார்
கள்ளருந்திப் பாழ்பட்ட கம்ப தாசன்
 கயல்விழியை 'வானத்தின் வாசல்' என்றான்
பள்ளியறைக் காதலியின் விழியை இந்தப்
 படைப்பாளர் 'கனவுகாணும் மீனென்' கின்றார்
தெள்ளுதமிழ்க் கவிஞர்களே கேளீர் 'தண்ணீர்த்
 தேமலன்றோ' அதோதெரியும் தீவென் கின்றார்.

பூட்டாத வில்லதுதான் வான வில்லாம்
பூமிக்கும் காதுண்டாம் அதுதான் புற்றாம்
தீட்டாத அம்பதுதான் மழைநீர்க் கோடாம்
தீக்குடுமி தான்புகையாம் என்றிவ் வாறு
நாட்டாண்மைக் காரன்மகன் தரங்கம் பாடி
நகரத்துப் பெரும்புலவன் பாட லானான்
மீட்டும்யா ழிசைவிரும்பும் இவரோ ஈர
மேகத்தின் பாலதுதான் மழையென் கின்றார்.

எண்கொடுத்தால் எழுத்துவரும்; பருவ காலம்
இடங்கொடுத்தால் மேகம்வரும்; ஒருவனுக்குப்
பெண்கொடுத்தால் உறவுவரும்; கலைஞன் என்னும்
பேர்கொடுத்தால் சிறப்புவரும்; பக்தர் இங்கே
மண்கொடுத்தால் குங்குமமே வருமாம்! என்ன
மதியீனம்! ஏமாற்று வித்தை! 'வீட்டில்
எண்ணெயில்லை, அரிசியில்லை, உப்பு மில்லை
எதுகொடுத்தால் இவைகிடைக்கும்?' எனக்கேட் கின்றார்.

'கல்லறையின் அருகினிலோர் கவிஞன் நின்று
கண்ணீர்விட் டழுகின்றான்' என்னும் பாடல்
மல்லிகைப்பூச் செண்டன்று; பெரியார் தொண்டன்
மனக்குமுறல். வைதீகப் பாதை நோக்கிச்
செல்வோரைக் கண்டிக்கும் கவிதை. கண்ணீர்த்
திவலைகளே வாய்திறந்து பாடும் பாடல்.
'இல்லையில்லை எனச்சொல்லி வளர்ந்தோர் இன்றோ
இருக்கின்ற தென்பானேன்?' எனக்கேட் கின்றார்.

கண்ணகியும் அன்றழுதாள்; கவிஞர் கோமான்
கம்பர்மகள் காவிரியும் அழுதாள்; ஆங்கோர்
பெண்ணரசி பத்மினியும் அழுதாள்; தோழிப்
பெண்ணழுதாள் நாமதனைப் பார்க்க வில்லை.
'கண்ணிமைகள் அடைகாக்கும் முட்டை' உப்புக்
கண்ணீரென் றெடுத்துரைக்கும் இவர்க்கு நாமோ
எண்ணூறு கோடிப்பொன் தரலாம்! பாரி
இன்றில்லை இருப்பினவன் கொடுத்தி ருப்பான்!

ஆடகப்பொன் அம்பொன்னாம், கரிகாற் சோழன்
அரண்மனைப்பொன் துளைப்பொன்னாம், பாவின்வேந்தர்
நாடகநூல் பலவற்றை ஆய்வு செய்த
நற்கவியின் நூலிதுவோ ஆணிப் பொன்னாம்!
'மூடமதி கண்டன'மென் றோர்நூல் பாட்டு
முத்திரையா லாகியநூல் அந்த நூலைக்
கோடையிடிக் கொப்பிட்டால் இதைநான், பாபர்
கொண்டுவந்த பீரங்கிக் கிணையாய்ச் சொல்வேன்!

சீர்காழி 'கண்ணுடைய வள்ளல்' என்பார்
தீட்டியநூ லாம்'ஒழிவில் ஒடுக்கம்' என்னும்
பேர்பெற்ற நூலதனை இராம லிங்கப்
பெருந்துறவி எடுத்தெடுத்துப் படிப்ப துண்டாம்.
ஏர்நடத்தும் தமிழகத்தில் உள்ளோ ரெல்லாம்
இந்நூலை எடுத்தெடுத்துப் படிப்பா ராயின்
சீர்பெறலாம் சிறப்புமிகப் பெறலாம் நன்கு
சிந்திக்கும் ஆற்றலையும் பெறலாம் என்பேன்!

---

■ *கவிஞர் எழிலரசு எழுதிய 'இன்னொரு விடுதலை' என்னும் நூலுக்கு 1984 - இல் வழங்கிய அணிந்துரை.*

# மண்ணிலே நல்ல வண்ணம் வாழலாம்!

எண்ணத்தில் தெளிவி ருந்தால்
இதயத்தில் அன்பி ருந்தால்
மண்ணிலே நல்ல வண்ணம்
வாழலாம் குடும்ப வாழ்வு!
திண்மையாம் உறுதிப் பாட்டால்
சிறப்புற அமையும் நெஞ்சில்
உண்மைகள் உலவு மாயின்
உலகமே நம்மைப் போற்றும்.

தைப்பனி சுடுவ தில்லை;
தமிழ்க்கவி கசப்ப தில்லை;
மெய்ப்பொருள் காணும் வாழ்வில்
வேற்றுமை எழுவ தில்லை;
எப்படி வாழ்ந்தால் வாழ்க்கை
இனிக்குமோ; புதுமை யாமோ;
அப்படி வாழ வேண்டும்!
அறம்பொருள் காண வேண்டும்.

ஒருவனுக்கும் ஒருத்திக்கும் அன்பும் பண்பும்
உள்ளத்தில் உருவாக வேண்டு மாயின்,
பருவநலம் கெடாதிருக்க வேண்டு மாயின்,
பயனுள்ள வாழ்வுபெற வேண்டு மாயின்,
திருமணந்தான் இதற்குவழி; இதற்கு மேலோர்
சிறந்தவழி இருப்பதுவாய்த் தெரிய வில்லை
திருமணந்தான் இல்லறத்தின் தொடக்க மாகும்.
சிறப்பனைத்தும் இதற்குள்ளே அடக்க மாகும்.

சித்திரமே! திருநாவுக் கரசு பெற்ற
செங்கமல வல்லி!மண மகனே! இன்றோ
அத்தகைய திருமணத்தை விரும்பி அன்பின்
அடிப்படையில் புதுவாழ்வை அமைத்துக் கொண்டீர்!
ஒத்தமனம் கொண்டுவிட்டீர்! அதனால் நீங்கள்
உவமையணி போற்சிறந்து விளங்கு கின்றீர்!
சித்திரையில் குயில்கூவும்! இனிமேல் உங்கள்
சிரிப்பொலியைக் கேட்கும்போ தெல்லாம் கூவும்.

வெண்ணிலவில் குடியேற முயற்சி செய்யும்
விஞ்ஞான காலத்தில், இரவில் நீங்கள்
கண்ணில்குடி யேறுவதே வெற்றி என்று
கருதிக்கொண் டிருக்காதீர்; நீங்கள் எண்ணும்
எண்ணத்தில் ஒருபாதி வீட்டுக் கென்றும்,
எங்களது தமிழ்த்தொண்டு நாட்டுக் கென்றும்
எண்ணுங்கள், நாள்தோறும் நாட்கு றிப்பை
எழுதுங்கள், வீண்பொழுது போக்கா தீர்கள்.

நீர்பெற்றும், நிலம்பெற்றும், மேலும் மேலும்
நிதிபெற்றும், அரசாங்க விருது பெற்றும்,
சீர்பெற்றும் சிறப்புமிக்க பரிசு பெற்றும்,
செல்வாக்கும் நல்வாக்கும் தொடர்ந்து பெற்றும்,
பேர்பெற்றும், பெருவாழ்வு பெற்றும், நல்ல
பிள்ளைகளை ஒன்றிரண்டே பெற்றும், மற்றும்
ஊர்பெற்றும், உலகுபுகழ் பெற்றும் வாழ்வில்
ஒளிபெற்றும் வையகத்தில் வாழ்வீ ராக !

---

■ *வானதி திருஞானசம்பந்தம் திருமண விழாவன்று வெளியிட்ட 'மண்ணிலே நல்ல வண்ணம் வாழலாம்' என்ற நூலில் 1984-இல் எழுதிய வாழ்த்துப்பா.*

# வெளிச்சம் வருகிறது!

பச்சரிசிப் பாரதியார், தேச பக்திப்
பாட்டெழுதத் தொடங்குதற்கு முன்பே, பூமி
மெச்சுபுகழ் நரசிமலு நாயு டென்பார்
விடுதலைப்பாட் டெழுதியவர். அந்த மேதை
அச்சிட்ட நூற்கள்பல வற்றுள் ஒன்றாம்
ஆரியதே சியக்கும்மி எனும்தம் நூலை
அச்சிட்டு வெளியிட்டார். ஜூலைத் திங்கள்
ஆயிரத்தெண் ணூற்றுத்தொண் ணூற்று மூன்றில்.

பகடாலு நரசிமலு விடுத லைக்குப்
பாடுபட்ட தேசபக்தர் பசித்து வந்தோர்
முகம்பார்த்த மூதறிஞர், தமிழ கத்தின்
முதல்தேசி யக்கவிஞர் அவரே யாவார்.
நகராத மாமலைகள் சூழ்ந்த கோவை
நகரத்தில் நூற்பாலை தோன்ற தற்கோர்
அகரமுத லெழுத்தைப்போன் றிருந்தார். மேலும்
அப்பெரியார் அச்சகமும் நடத்தி வந்தார்.

அவரைப்போல் சீர்திருத்தக் கவிஞ ராக
அச்சகத்தை நடத்திவரும் இளைஞ ராக
நவமணியில் ஒருமணிபோல் விளங்கு கின்ற
நண்பர்ஜெய மாலிகா கண்ண னென்பார்
புவியீர்ப்புச் சக்தியைப்போல் ஆற்றல் மிக்க
புதுக்கவிதை எழுதுவதில் கெட்டிக் காரர்.
இவருடைய முதற்கவிதை நூலாம் இந்நூல்
இளவேனில் தருகின்ற தென்ற லாகும்.

கொட்டையுள்ள மாங்கனியைப் பரதே சிக்குக்
கொடுத்தாளாம் காரைக்கா லம்மை. நன்கு
திட்டமிட்டுச் செயலாற்ற வல்ல தோழர்
ஜெயமாலி நடத்திவந்த இதழில் ஒன்றாம்
அட்டையிட்ட 'மாங்கனி'யைக் கொடுத்தார். பின்னர்
அழகான குறுநாவல் கொடுத்தார். இன்றோ
கட்டாணி முத்தைப்போல் சிறப்பு மிக்க
கவித்தொகுப்பை என்னிடத்தில் கொடுக்க லானார்.

நானூறு பாக்கள்கொண்ட கோவை நூலை
நமதுபொய்யா மொழிப்புலவர் அன்று தந்தார்.
நானூறு பாக்களைநான் தராவிட் டாலும்
நான்நூறு தந்துள்ளேன் என்று கூறித்
தேனூற்றுக் கவிராயர் சாத்தம் பாக்கம்
ஜெயமாலி காகண்ணன் கொடுத்த நூலை
வானூர்தி எனும்நிலவு வந்த பின்னர்
வாசிப்போம் என்றெண்ணிக் காத்தி ருந்தேன்.

வாழ் - 3

வெளிச்சம்வந்த நேரத்தில் ஆர்வத் தோடு
வெளிச்சம்வரு கிறதென்னும் கவிதை நூலைப்
பளிச்சென்று நானெடுத்துப் படிக்க லானேன்
பதினைந்தாம் பக்கத்தில் இடம்பெற் றுள்ள
உளவறியும் உள்மனமென் கின்ற பாட்டை
உள்ளத்தால் வாசித்தேன். பின்யோ சித்தேன்.
களங்கண்ட இக்கவிஞர் இயற்றி யுள்ள
கைநிலவுக் கவிதையைநான் மறக்க மாட்டேன்.

மாவிலைத்தோ ரணம்தொங்கும் தோற்றம் போல
வானத்தில் பறக்கும்பைங் கிளிகாள் நீங்கள்
காவலின்றி, உள்ளத்தில் கவலை யின்றிக்
களங்கமின்றி ஒற்றுமையாய் வாழ்கின் றீர்கள்.
பூவுலகில் ஆறறிவு படைத்த நாங்கள்
புறங்கூறித் திரிகின்றோம்— நாங்கள் நச்சுத்
தாவரங்கள்! பொறாமையினால் பிரிந்து நிற்கும்
தனிமரங்கள் எனப்பாடி வருந்து கின்றார்.

மீன்பிடிக்கும் வெண்ணிலவைப் பார்த்துக் கொண்டு
மேடையில்நான் அமர்ந்திருந்தேன். அப்போ தாங்கே
தேன்கொடுக்கும் பூவழகி ஒருத்தி வந்து
சிரித்தபடி எனைத்தொட்டாள். ஒட்டிக் கொண்டேன்.
நான்விழித்துப் பார்த்திட்டேன் அவளைக் காணோம்.
நான்கொணர்ந்த பணப்பையும் காண வில்லை.
ஊன்றிவைக்கப் பட்டவிதை அவளென் றெண்ணி
உல்லாசக் கனவுகண்டேன், தோல்வி கண்டேன்.

எனும்கருத்தில் இவரியற்றி யுள்ள பாடல்
எச்சரிக்கை யோடிருக்க உதவும் பாடல்
தனக்குமிஞ்சி தானென்ற கவிதை இந்தத்
தரணிக்கே தேவையுள்ள கவிதை யாகும்.
தனித்திருந்தும் பசித்திருந்தும் விழித்தி ருந்தும்
தமிழ்நூற்கள் பலவற்றை ஒவ்வோர் நாளும்
பனித்துறவி இராமலிங்கர் படித்தாற் போன்று
படியுங்கள் இந்நூலைப் பயனுண் டாகும்.

வானத்தில் குடியேறப் போகும் காலம்
வருங்காலம் என்பதனால், அதனைப் பற்றித்
தேனொத்த புதுக்கவிதை புனைந்தி டட்டும்
செய்யாறு துரைசாமி என்பார் பேரன்.
சீனத்தில் உருவாக்கப் பட்டி ருக்கும்
செயற்கைமீன் குஞ்சுகளின் பிறப்பைப் பற்றி
ஆனந்தக் களிப்போடு கவிதை பாடி
அடுத்துவரும் புதுநூலில் இவர்சேர்க் கட்டும்.

■ *கவிஞர் ஜெயமாலிகா கண்ணன் எழுதிய 'வெளிச்சம் வருகிறது' என்னும் நூலுக்கு 1984-இல் வழங்கிய அணிந்துரை.*

# வண்ணப்பூங்கா!

தாமரைப்பூத் தடாகமொரு கிண்ணப் பூங்கா;
　　தலைசிறந்த கட்டுரையோ எண்ணப் பூங்கா;
ஊமைநிலா ஊர்ந்துசெல்லும் வானில். தோன்றும்
　　உடுக்களெல்லாம் தேயாத புள்ளிப் பூங்கா;
பூமிபுக ழும்நேசன் கவிஞர் வாசன்
　　புதுநூலாம் முதல்நூலாம் இந்நூல் மக்கள்
சேமமுற வேண்டுமெனும் நோக்கத் தோடு
　　தீட்டியநூல்—இதன்பெயரோ 'வண்ணப் பூங்கா'.

கோட்டுப்பூ எனச்சொல்வர்; கொடிப்பூ என்பர்;
　　குளத்துப்பூ எனச்சொல்வர்; புதர்ப்பூ என்பர்;
ஏட்டுப்பூ நம்வீட்டில் இருக்கு மாயின்
　　எண்ணத்தைப் புதிதாக்கும் புலமை சேர்க்கும்;
தீட்டுவந்த தாமரைப்பூ தன்னில் இன்பத்
　　தேன்சுரக்கும்; அத்தேன்போல் இனிமை யுள்ள
பாட்டுக்கள் இந்நூலில் அதிகம்! இந்நூல்
　　பயனுள்ள பகுத்தறிவுப் பதிக மாகும்!

அண்ணாவின் நினைவுகளைக், கலைஞர் நாவின்
அசைவுகளைப், பெரியாரின் தத்து வத்தைப்
பண்ணார்ந்த செந்தமிழில் கவிஞர் வாசன்
படம்பிடித்துக் காட்டியுள்ளார் மிகநன் றாக!
கண்ணோட்டம் நன்றாக இருக்கு மாயின்
கவிதைகளும் மிகநன்றாய் அமையும்! தூங்கும்
எண்ணங்கள் இந்நூலில் இருப்ப தாக
எவர்சொன்ன போதும்நான் ஏற்க மாட்டேன்!

முடிசார்ந்த மன்னவனின் செங்கோல் இன்றே
முறியட்டும், கோட்டைக்கொத் தளங்கள் யாவும்
இடியட்டும், தீப்பற்றி மதுரை மூதூர்
எரியட்டும் எனமுழக்க மிட்ட பெண்போல்
“மடமையிலே உழலுகின்றார் பரவட் டும்தீ!
மதங்களிலே வீழுகின்றார் பரவட் டும்தீ!
கடமையினை மறக்கின்றார் பரவட் டும்தீக்
கன”லென்று குமுறுகின்றார் கவிஞர் வாசன்!

கண்பூக்கள் போற்சிறந்து விளங்கு கின்ற
கவிக்கொண்டல் மாணவராம் இந்த வாசன்
வெண்பூக்கள் எனும்தலைப்பில் போற்றத் தக்க
வெண்பாக்கள் பாடியுள்ளார் எனினும், முன்பு
விண்பூக்கள் எனும் தலைப்பில் மேலைத் தஞ்சை
வேதநா யகக்கவிவிண் வெளியைப் பற்றிப்
பண்பூத்த செந்தமிழில் பாடி னாற்போல்
பாடட்டும்! இவருமவர் போலா கட்டும்!

---

■ *ஓவியக்கவிஞர் வாசன் எழுதிய ‘வண்ணப்பூங்கா’ என்னும் நூலுக்கு 1985-இல் வழங்கிய அணிந்துரை.*

# அணிகலன்!

கருத்துணர்ந்து கற்றறிந்து தெளிந்த வீர
கவிராசன் ‘செங்கோட்டுப் புராணம்’ தந்தான்.
சரித்திரத்தை நினைவூட்டும் ‘பெரியார் பிள்ளைத்
தமிழ்’தந்தார் மாவண்ணா தேவ ராசன்.
விருப்பத்தை நிறைவேற்றும் புலவன் முத்து
வீரப்ப முடிராசன் ‘கும்மி’ தந்தான்.
அருத்தமுள்ள தமிழ்பயின்ற தங்க ராசன்
அணிகலனென் னும்கவிதை நூல்தந் துள்ளார்.

நேரத்தின் அடையாளம் கதிரோ னாகும்.
நினைவுகளின் அடையாளம் ஆசை யாகும்.
ஈரத்தின் அடையாளம் மேக மாகும்.
இன்பத்தின் அடையாளம் காத லாகும்.
சாரத்தின் அடையாளம் தாய்ப்பா லாகும்.
சமூகத்தின் அடையாளம் கூட்ட மாகும்.
வீரத்தை வரவேற்கும் தங்க ராசன்
வெற்றிக்கோர் அடையாளம் இந்நூ லாகும்.

பிச்சைக்கோர் பாஸ்கரதாஸ், இலக்கி யத்தின்
 பெருமைக்கோர் சங்கரதாஸ், இளமை தூண்டும்
இச்சைக்கோர் உடுமலைவாழ் முத்துச் சாமி
 என்றுசொல்ல நான்கேள்விப் பட்ட துண்டு.
கச்சிதமாய்க் காவியங்கள் படைப்ப தற்கோர்
 கவியுள்ளார். அன்னவர்தாம் தங்க ராசன்.
எச்சிலையும் தேனாக மாற்றும் சக்தி
 இவர்கவிதைக் குண்டென்று துணிந்து சொல்வேன்.

படித்தவுடன் உள்ளத்தில் பதியு மாறு
 பாட்டெழுத வல்லோரே, இவ்வை யத்தில்
நடுக்கமிலாப் புகழ்பெறுவர், பாடி ஓடும்
 நதியாகக் காட்சிதரும் தங்க ராசன்
அடிப்படையென் னும்சிறந்த தலைப்பில், யாப்பின்
 அடிப்படையில் பன்னிரண்டு விருத்தப் பாவால்
தொடுத்திருக்கும் முதற்கவிதை ராஜ ராஜ
 சோழமன்னன் கடற்படைபோல் சிறந்த தாகும்.

மாதத்திற் கொருதடவை மரண மாகி
 மறுபடியும் பிறக்கின்ற நிலவை நோக்கி
ஆதங்கத் தோடிந்தக் கவிஞர் கேட்கும்
 அலையோசைக் கேள்விகளும்; அழுவோர் தங்கள்
பாதத்தைக் கழுவுகின்ற கண்ணீர் பற்றிப்
 பாடியுள்ள தனிப்பாட்டும்; வேலிப் பாட்டும்;
மீதமுள்ள கவிதைகளும் இவரை இந்த
 மேதினியில் புகழ்ப்பயணம் செய்யத் தூண்டும்.

■ *கவிஞர் மு. தங்கராசன் அவர்கள் எழுதிய 'அணிகலன்' என்னும் நூலுக்கு 1985 இல் வழங்கிய அணிந்துரை.*

# விசாரணைக்கு வந்த வழக்குகள்!

முந்துவழக் கெனும்சிலம்பு வழக்கும், செம்பொன்
முடிவேந்தன் மீதொருத்தி விட்டெ றிந்த
பந்துவழக் கெனும்வழக்கும், வள்ள லாரின்
பாட்டுவழக் கெனும்வழக்கும், விசார ணைக்கு
வந்தவழக் குகளாகும். கவிதன் என்பார்
வழங்கியுள்ள இந்நூலோ, 'விசா ரணைக்கு
வந்தவழக் குகளென்னும்' பெயரைக் கொண்ட
மறுமலர்ச்சி நூலாகும் உரைவீச் சாகும்.

இளங்கவிஞர் என்றாலும் கவிதன் என்னும்
இக்கவிஞர் இயற்றியுள்ள புதிய பாக்கள்,
களங்கண்ட கவிஞர்களை வியப்பி லாழ்த்தும்!
கற்பனையும், தலைப்புகளும் பிறரை வீழ்த்தும்!
பளிச்சென்று நம்முடைய சமுதா யத்தைப்
பாக்களினால் படம்பிடித்துக் காட்டி, நம்மை
வெளிச்சத்திற் கழைக்கின்றார். எதிர்கா லத்தின்
விளைவுகளை முன்கூட்டி அறிவிக் கின்றார்.

மொழியானால் பொருளாவேன்; மற்றும் நீயோர்
முள்ளானால் மலராவேன் கண்ணே! பெய்யும்
மழையானால் பயிராவேன் காதல் மாதே!
மண்ணானால் மரமாவேன் என்ப தாகப்
பழகுதமிழ்ச் சொற்களினால் கண்ண தாசன்
பாடியுள்ள திரைப்பாடல் ஒன்றைப் போல,
வழிமொழியும் பாடலொன்று பாடி யுள்ளார்.
வாக்குறுதி யற்றோரைச் சாடி யுள்ளார்.

மலர்வதற்கே அரும்பானேன். சுருங்கச் சொன்னால்
மணப்பதற்கே மலரானேன். ஆனால் இன்றோ
கலையழகோ டெனையெடுத்துத் தொடுப்ப தற்குக்
கரமின்றி வாடுகின்றேன் அந்தோ! என்று
பலர்காணும் 'ஒருமலரின் அழுகை' பற்றிப்
பாடியுள்ள பாடல்மிகச் சிறந்த பாடல்.
'இலையுதிரும் கால'மெனும் இனிய பாடல்.
இக்கவியைப் புகழ்ச்சிக் கனுப்பும் பாடல்.

இவருடைய பாடல்களில் பழமை இல்லை.
எண்ணுமிவர் எண்ணத்தில் முதுமை இல்லை.
மவுனத்தைப் பின்பற்றும் கவிதன் என்பார்,
'மரங்களெனும்' தலைப்பினிலே பாடி யுள்ள
கவிதைமிகச் சிறப்புடைய கவிதை யாகும்.
கற்கண்டுக் கட்டிகளின் வட்ட மாகும்.
'தவங்கிடக்கும் தற்கொலைகள்' என்னும் இந்தத்
தலைப்புக்கே முதற்பரிசு தரலாம் என்பேன்.

---

■ *கவிஞர் கவிதன் எழுதிய 'விசாரணைக்கு வந்த வழக்குகள்' என்னும் நூலுக்கு 1985 - இல் வழங்கிய அணிந்துரை.*

# மூன்றாவது கண்!

சீர்திருத்தப் பாவலராம் அம்மை நாதன்;
சிங்கப்பூர் துணிவணிகர் முகமத் காசிம்;
பார்திருத்தம் பெறவேண்டிப் புரட்சிப் பாக்கள்
பலபுனைந்த சமதர்ம சாமி நாதன்;
பூர்வீகச் செந்தமிழைக் கற்றுத் தேர்ந்த
புலவர்சதா சிவம்பிள்ளை; வேலுப் பிள்ளை;
தேர்செல்லும் வீதியிலே வாழ்ந்து வந்த
சித்தாந்தி வீரப்ப செட்டி என்பார்;

மங்கைமணி யாம்நீலாம் பிகையார், மற்றும்
மறைமலையார் பிறந்தஇடம் நாகை யாகும்.
சுங்கப்பட் டாணியெனும் ஊரில் அப்துல்
சுபஹானென் றோர்கவிஞர் வாழ்ந்து வந்தார்.
அங்கந்த ஊரிலவர் வாழ்ந்தா ரேனும்
அக்கவிஞர் பிறப்பிடமும் நாகை யாகும்.
துங்கமணி தூயமணிக் கவிஞ ரான
சுபாவென்பார் பிறப்பிடமும் நாகை யாகும்.

சிவனுக்கு மூன்று கண்ணாம், மன்னன் ரஞ்சித்
சிங்கனுக்கோ ஓர்கண்ணாம், தொண்டு செய்து
லவணமெனும் உப்பைப்போல் கரைந்து போன
லையூ—சூ—சங்கென்னும் சீன னுக்கோ
நவமணிபோல் ஒளிவீசும் கண்கள் நான்காம்!
நறுக்கென்றும் சுருக்கென்றும் தைக்கும் வண்ணம்
கவியெபதும் இவருடைய புதுநூ லுக்கோ
கையிரண்டாம், மெய்யொன்றாம் கண்கள் மூன்றாம்.

முற்போக்குச் சிந்தனைக்கும் கற்ப னைக்கும்
முதலிடத்தைக் கொடுக்குமிந்தக் கவிஞர் ஓர்நாள்
நெற்றியிடம் பிறைநிலவு வந்து பேசும்
நேரத்தில் கருங்கடலை உற்று நோக்கி
அற்புதமாய் அக்கடலைக் குறித்தோர் பாடல்
அலையோசைச் சொற்களினால் பாடி னாராம்.
முற்றுகையை முறியடிக்கும் இந்த நூலில்
முதலிலுள்ள பாடலந்தப் பாட லாகும்.

அந்தநிலா இந்தநிலா எனப்பா டாமல்
ஆடைகட்டி வந்தநிலா என்று பாடிச்
சிந்திக்க வைத்தானே நம்மை எல்லாம்
திரையுலக கவிஞர்களுள் ஒருவன், அன்னோன்
சிந்தனைக்கோர் அடையாளம் அந்தப் பாடல்.
சீர்திருத்தக் கவிஞர்சுபா இயற்றி யுள்ள
முந்துதமிழ்ப் புதுக்கவிதைப் புத்த கத்தின்
முதற்பாடல் முதல்வெற்றிக் குரிய பாடல்.

சூரியனைக் கழுவுகின்ற கடலைப் பற்றிச்
சுவையாகப் பாடியுள்ளான் கம்பன். செய்யுள்
சாரதியாம் கடிகைமுத்துப் புலவ னென்பான்
சமுத்திர விலாசமெனும் நூலின் மூலம்
தோரணவா யிலைப்போன்று பெருமை பெற்றான்.
சுபாவென்னும் இக்கவிஞர் இயற்றி யுள்ள
ஈரவரிப் பாட்டென்னும் இந்தப் பாட்டும்
இலக்கியநூற் றாண்டுகளோ டிணைந்து செல்லும்.

தனித்தலைவர் வருகின்ற தருணம் என்றோர்
தமிழ்த்துறவி பாடியுள்ளார் எனினும் இங்கோ
பனித்துளியே பெருமழைக்குத் தலைமை தாங்கப்
பார்க்கின்றோம், அரசியலில் இதைப்பார்க் கின்றோம்
மனமயக்கம் தீராத நாட்டில். போலி
மனிதர்களே பெருந்தலைவர் ஆவர் என்னும்
அனுபவத்தைப் பாட்டாக்கிக் காட்டி யுள்ளார்.
அப்பாட்டு நமக்கெல்லாம் மெய்ப்பாட் டாகும்.

பாடுகின்ற தேனீயாம் ஏவாள் என்பாள்
பாம்பொன்று படமெடுத்த கார ணத்தால்,
ஆடையினால் தன்னுடலை மூடி னாளாம்
அந்நாளில்! இப்போது நிலைமை என்ன?
ஆடைகளை அவிழ்க்கின்றார். பிடாரன் என்பான்
அருகில்வந்து படமெடுக்கும் கார ணத்தால்
மேடுகளை வெளிச்சத்தில் காட்டு கின்றார்!
மிச்சத்தை வேறிடத்தில் காட்டு கின்றார்!

நாகரீகம் மிக்கதமிழ் நாட்டில் பெண்டிர்
நடவடிக்கை இன்றிவ்வா றிருத்தல் கண்டு
பூகம்பக் கவிஞர்மிக வருந்து கின்றார்.
புத்திமதி சொல்கின்றார் பாட்டின் மூலம்.
வேகத்தால் வடநாட்டுக் குந்தி யாகி
விடாதீர்கள் மங்கையரே! நெஞ்சைத் தாக்கும்
சோகத்தால் சீர்குலைந்து சிந்தை மாறிச்
சோரம்போய் விடலாமா? எனக்கேட் கின்றார்.

பலாமரத்தின் கீழ்வேங்கைப் புலிகள் வந்து
படுத்துறங்கும் தமிழ்நாட்டில் இன்று வாழும்
நிலாப்படகுக் கவிஞரிந்த நூலின் மூலம்
நிலைத்தபுகழ்க் குரியரெனும் இடத்தைப் பெற்றார்.
அலாவுத்தீன் கில்ஜி என்பார் ஆண்ட நாளில்
அவர்பெயரை நாணயத்தில் செதுக்கச் செய்தார்
சலாவுத்தீன் எனுமிவரின் பெயரும் ஓர்நாள்
தங்கநா ணயத்திலிடம் பெறுதல் கூடும்.

கத்துகடல் சூழ்நாகப் பட்டி ணத்துக்
கவிஞர்சுபா இயற்றியநூ லிதனைக் கொற்கை
முத்துக்கு நிகரென்பேன். உமர்கை யாமின்
முகத்தமைந்த கண்களைப்போல் சிறந்த தென்பேன்.
உத்தரவுக் கடங்காத அலைக ளென்பேன்.
ஒப்பற்ற புதுக்கவிதைப் புதைய லென்பேன்.
கத்தரிக்கோல் தேவையில்லை, பழமை தன்னைக்
கத்தரித்து விட்டெறிய இந்நூல் போதும்.

---

■ *கவிஞர் எஸ். சுபா எழுதிய 'மூன்றாவது கண்' என்னும் நூலுக்கு 1985 - இல் வழங்கிய அணிந்துரை.*

# நன்னியூர் நாவரசன் கவிதைகள்!

நாவரசன் என்நண்பர், சமுதா யத்தின்
நன்மையிலே நாட்டமுள்ள அன்பர்;எங்கள்
பாவரசன் பரம்பரையில் ஒருவர், மேலும்
பண்டொருநாள் உறையூரை ஆண்ட சோழ
மாவரசன் தித்தன்மகன் கிள்ளி யைப்போல்
மறச்சிந்தை கொண்டஇவர் இலக்கி யப்பூங்
காவரசன், இவர்படைக்கும் கவிதை வற்றாக்
காவிரிபோல் பெருகிவரும், இன்பம் துள்ளும்!

ஆழ்வார்கள் பன்னிருவர்; நாயன் மாரோ
அறுபத்து மூவரெனச் சைவர் சொல்வர்.
வீழ்ந்தாரை எழச்செய்து வந்த, பாவின்
வேந்தர்பரம் பரைக்கவிஞர் நாற்பத் தேழ்பேர்.
கீழ்வானக் கதிரவன்நான் என்றால், நல்ல
கீர்த்திமிகு கவிஞர்நா வரசன் என்பார்
ஏழ்தெங்க நாட்டரசன் படையைப் போன்றார்.
இரும்பிடர்த் தலையாரின் கைவேல் போன்றார்.

மங்கலஞ்சேர் திருச்சியிலே பிறந்து வாழ்ந்த
மகாவித்வான் கோவிந்த பிள்ளை என்பார்
துங்கமணித் தமிழ்வளர்த்த பெரியார்; செய்யுள்
சுரங்கமவர். அன்னவரோர் மணியக் காரர்.
சங்கமங்க லம்பழைய னூரில் வாழ்ந்த
தமிழறிஞர் முருகைய பிள்ளை என்பார்
எங்களூர்க் காரரவர்; மணியக் காரர்.
இக்கவிஞ ரும்முன்னாள் மணியக் காரர்.

நதிநடந்து செல்லுகின்ற ஊரில் வாழும்
நாவரசன் இயற்றியுள்ள நூலில், செய்யுள்
விதிநடந்து முன்செல்ல, எதுகை மோனை
வெற்றிதரும் சந்தங்கள் பின்னே செல்லக்
கதைநடந்து செல்வதைநான் காணு கின்றேன்.
கவிதைஅர சாங்கத்தை இதில்காண் கின்றேன்.
முதற்கவிதை புகழ்பெற்ற பொன்னி ஏட்டை
முத்தமிட்ட கற்கண்டுக் கவிதை யாகும்.

சினங்கொண்டு போரிட்டு வெற்றி பெற்ற
'செங்கண்ணன்' மரபில்வந்த நன்னி யூரார்,
பனைமடலில் கூடுகட்டும் அன்றில் போன்று
பைந்தமிழில் கவிதையெனும் கூடு கட்டி
நினைவுகளை வார்த்தெடுத்துப் புதுமை சேர்த்து
நின்றுநிலை பெறும்பாடல் பலதந் துள்ளார்.
தனிஇனிமை தருமிவரின் சிந்துப் பாடல்
தமிழ்க்கவிதை பலவற்றை முந்தும் பாடல்.

உப்பமைந்த காமத்தைப் போன்ற பாடல்
ஒவ்வொன்றும் நமதுசமு தாயமென்னும்
கப்பலுக்கு நங்கூரம் போன்ற தாகும்
காலத்துக் கேற்றபுதுப் படைய லாகும்.
செப்புமொழி பதினெட்டா? அடடே, பார்பார்
தீட்டுகின்றேன் "நாவரசன் நாற்ப"தென்று
'தைப்பாவைக் கவிஞ'னிடம் அன்று சொன்னார்
தலைசிறந்த இந்நூலில் அதைக்காண் கின்றேன்.

அணில்கடித்த மாம்பழமாம் ஈழ நாட்டின்
அஞ்சுகமாம் தாசிப்பெண் ஒருத்தி, 'ருத்ர
கணிகையரின் கதாசாரம்' என்னும் நூலைக்
கைதேர்ந்த உரைநடையில் இயற்றி யுள்ளாள்.
மணிக்கணக்காய் உரையாற்றும் திறமை பெற்ற
மழைக்கவிஞ ராம்இவரோ ஒவ்வோர் நாளும்
பணம்பறிக்கும் தாசிகளின் தமிழை, நன்கு
படம்பிடித்துக் காட்டியுள்ளார் பாட்டின் மூலம்.

தென்னிலங்கை இராவணனோர் வீர வேந்தன்,
சிறப்புமிகு பேரறிஞன், யாழில் வல்லோன்.
அன்னவனோர் இசைநூலை இயற்றி யுள்ளான்
அவ்விசைநூ லின்பெயரோ 'இராவ ணீயம்'
இன்னமுத கவிராயர் நன்னி யூரார்
இந்நூலுக் கிவர்பெயரை இட்ட தாலே,
தன்னம்பிக் கையுடைய கவிஞ ரானார்
தமிழ்நம்பிக் கையுடைய கலைஞ ரானார்.

■ *கவிஞர் நன்னியூர் நாவரசன் எழுதிய 'நன்னியூர் நாவரசன் கவிதைகள்' என்னும் நூலுக்கு 1986-இல் வழங்கிய அணிந்துரை.*

# இந்த தேசம் கைதாகிறது!

பல்லிரண்டு முளைத்தவுடன் மழலை பேசிப்
பன்னிரண்டாம் வயதுமுதல் கவிதை பாடி
வல்லமையைப் புதுக்கவிதை மூலம் காட்டி
வரும்கவிஞர் சோம.குரு மூர்த்தி என்பார்
செல்லுபடி யாகின்ற நடையில், இந்த
நேசம்கை தாகின்ற தென்னும் நூலை
நல்லபடி உருவாக்கிக் கவிதை என்னும்
நதியாக்கி நாட்டுக்குக் காட்டி யுள்ளார்

பல்லவி

கல்வியில் வல்லவரே – பிழை
கண்டாலும் நேசித்துக் கொள்வீர்கள் வாசித்துக் (கல்வி)

வாழ்-4

அநுபல்லவி

அல்வழி வேற்றுமை அற்பமும் தெரியேன்
அன்றியிலக்கியத் தளவுங் குறியேன்
சொல்வழி ஈதென்று தோணாத சிறியேன்
சொன்மொழி மழலை வழக்கென
முன்மகிழ் வுறுகுண முற்றின (கல்வி)

செப்புமென் பாட்டில் தேடாமல் பிழைசிக்கும்
தெரிந்துமண்சோற்றில்கல் தேடுவதை ஒக்கும்
ஒப்பி வேலுச்சாமி யைப்பரி பாலிக்கும்
உலகத் தமிழிலு மற்ற
பலவற்றிலு முயர் வுற்ற (கல்வி)

என்றந்தப் பெருங்கவிஞர் வேலுச் சாமி
இவ்வாறோ ரவையடக்கம் பாடி யுள்ளார்.
தன்னுடைய முதல்நூலுக் கிவரும், தூங்கும்
தாமரைபோல் அவையடக்கம் பாடி யுள்ளார்.
மன்னைநகர்க் கவியினவை யடக்கம் தன்னில்
மௌனத்தைக் காணுகின்றேன், இவரிந் நாட்டை
முன்நிறுத்திப் பாடியுள்ள பாடல் தன்னில்
முன்கோப முத்திரையைக் காணு கின்றேன்.

பிரியதரி சனம்தந்து வந்த இந்த்ரா
  பிரியதரி சினியையவர் மெய்க்காப் பாளன்
அரைநிமிட நேரத்தில் சுட்டுக் கொன்றான்.
  அன்னை இந்த்ரா மரணமுற்ற செய்தி கேட்டுச்
சுருங்கிவிரி கின்றவெய்யில் அதுவே, காலைச்
  சூரியனைச் சுட்டெரித்து விட்ட தென்று
வருந்தியிவர் பாடியுள்ள வரிகள் கண்ணீர்
  வாய்க்கால்கள்! ஒப்பாரி உப்ப ளங்கள்!

இரவுக்கோ ராயிங்கண் உண்டென் கின்றார்
  இங்கிலாந்துக் கவிஞர் – போர் டில்லன் என்பார்
புருவத்தை மேலேற்றி ஒவ்வோர் நாளும்
  புகழையும்மே லேற்றிவரும் இவரைக் கேட்டால்
இரவுக்குக் கண்ணில்லை எனச்சொல் கின்றார்.
  ஏனில்லை என்பதையும் விளக்கு கின்றார்.
பருவநிலா வெளிச்சத்தில் விவாக ரத்துப்
  பண்ணிக்கொண் டோடியவள் இருட்டுப் பூவாம்!

உப்புடைக்காய் எதுதம்பி என்று கேட்டால்
  ஊறுகாய் எனச்சொல்வான், அவனை நோக்கி
முப்புடைக்காய் எதுதம்பி என்று கேட்டால்
  முழித்திடுவான், முப்பக்கம் உடைய காயை
முப்புடைக்காய் என்பர். சிலர் தேங்காய் என்பர்.
  முதுபுலவன் ஒருவனதைத் தேன்காய் என்றான்.
சிப்பிமுத்து நூலிதனைத் தேங்காய் என்று
  சிலர்சொன்னால் நானிதனைத் தேன்காய் என்பேன்.

பேரூர்போல் காட்சிதரும் நூலாம் இந்நூல்
பின்னழகும் முன்னழகும் அமைந்த தோர்நூல்,
சீரோடு நன்கமைந்த பாக்கட் கெல்லாம்
சிற்றூர்போல் தலைப்புக்கள். பூத்த பூவை
ஆராயும் தும்பியெனும் கவிதைத் தம்பி
அமுதோனின் ஓவியங்கள் பழமை யோடு
சேராத சிந்தனைகள் இடம்பெற் றுள்ள
சிறப்புமிகு நூலின்னூல் என்று சொல்வேன்.

வங்கியெனும் 'பணக்கூடம்' தன்னில், மிக்க
மகிழ்ச்சியொடு பணிபுரியும் இவரைப் பற்றி
அங்கிருக்கும் நண்பர்களும் அறிவர். பாடல்
அரங்கேறும் மேடைகளும் அறியும். கட்டித்
தங்கத்தாய் ரஞ்சிதத்தின் இளைய மைந்தன்
தற்கால நிலையறிந்து பாடி யுள்ள
மங்கலப்பொன் நூலிவர்க்குப் பெருமை சேர்க்கும்
மண்முட்டை உலகமினி இவரைப் பார்க்கும்!

■ *கவிஞர் சோ, குருமூர்த்தி எழுதிய 'இந்தத் தேசம் கைதாகிறது' என்னும் நூலுக்கு 1986 - இல் வழங்கிய அணிந்துரை.*

# கலைவனத்தின் கலைமான்கள்!

தலைசிறந்த நடிகர்நடி கையரின் வெற்றித்
தலமென்னும் திரைஉலகம் தன்னைப் பற்றிச்
சலசலப்புக் கஞ்சாத இளைஞ ரான
ச(ர்)க்கரைப் புலவரென்பார் 'தமிழ கத்தின்
கலைச்செல்வம்'எனும்நூலை முதலில் தந்து
கலைஉலகின் பாராட்டைப் பெற்றார். இன்றோ
'கலைவனத்தின் கலைமான்கள்' என்னும் நூலைக்
கவிஞர்மணி நம்மவர்க்கு வழங்கி யுள்ளார்.

கற்றோர்க்கு வணக்கமெனத் தொடங்கிப் பின்னர்
கலைவாணர் என்.எஸ்.கே. தம்மைப் பற்றி
முற்றியதோர் நிலாக்கவிதை பாடி, முன்னாள்
முதலமைச்சர் எம்.ஜி.ஆர். வாழ்வைக் கூறி
நற்றமிழர் மரபில்வந்த சிவாஜி என்னும்
நடிகரவர் சாதனையைப் பதிவு செய்து
மற்றமற்ற கலைஞர்கட்கும் இடம ளித்து
மணிபார திக்கவிஞர் நூல்யாத் துள்ளார்.

பதார்த்தகுண மெனும்சிந்தா மணியைப் போன்ற
பானுமதி, ஜெயலலிதா, சரோஜா தேவி,
சதானந்தத் தோடிருக்கும் விஜயா, மற்றும்
சாவித்ரி, ஸ்ரீதேவி, சுஜாதா, நல்ல
கதாபாத்ர நடிகைகண் ணாம்பா, ஆடற்
கலையில்வல்ல பத்மினியாம் இவர்கள் பற்றி
உதாரணத்துக் கொருகவியாய் விளங்கு கின்ற
ஒப்பற் கவிஞரிவர் விளக்கி யுள்ளார்.

இயக்குநராம் ஏ.பி.என்., ஸ்ரீதர் பீம்சிங்,
இராமண்ணா, பாக்கியராஜ், பால சந்தர்,
பயமின்றிப் புதுமைகளைப் புகுத்து கின்ற
பாரதிரா ஜாஎன்னும் பருவ ராஜா,
வியப்பூட்டும் ராஜேந்தர் ஆகி யோரின்
வெற்றிவர லாறுகளைப் புகழ்ந்து பாடி
செயத்தம்பம் நாட்டியுள்ளார்! பாக்கள் மூலம்
செய்திகளைச் சுவையாகக் கூறி யுள்ளார்.

இசைக்கலைஞர் மகாதேவன், விசுவ நாதன்
ஏந்துபுகழ் சந்திரபோஸ், இளைய ராஜா,
பசிக்குணவு தருவதுபோல் மாந்தர்க் கெல்லாம்
பாட்டுணவு தந்துவரும் சுசீலா, மற்றும்
திசைபுகழப் பாடும்பால சுப்ர மண்யம்,
சீர்காழி கோவிந்த ராசன், செந்தேன்
கசிகின்ற திரைப்பாடல் எழுத வல்ல
கவிஞர்தமைப் பற்றியெலாம் பாடி யுள்ளார்.

அருணகிரி திருப்புகழை, வள்ள லாரின்
அருட்பாவை மனமுருகிப் பாடி வந்த
திரையுலகத் தாரகையாம் நமது கே.பி.
சுந்தராம்பாள், முதன்முதலில், இந்தி யாவில்,
ஒருபடத்துக் கொருலட்ச ரூபாய் பெற்ற
ஒப்பற்ற தமிழ்நடிகை யாவார்! அந்தத்
திருமகளைப் பற்றியிவர் பாடி யுள்ள
செய்யுளுக்கே ஒருலட்சம் தரலாம் என்பேன்.

பாரதியார் திரைப்படத்திற் காக வேண்டிப்
பாட்டெழுதித் தரவில்லை எனினும், அந்தப்
பாரதியார் பாடல்களைப் படமெ டுப்போர்
பயன்படுத்தி வருவதனைக் காணு கின்றோம்.
ஆரமுதம் போற்சிறந்த வள்ள லாரின்
அருட்பாவும் படத்திலிடம் பெறக்காண் கின்றோம்.
பாரதியார்க் கிந்நூலில் இடங்கொ டுத்த
பாவலரேன் வள்ளலாரை மறந்து போனார்?

அடுத்தமுறை இவரியற்றப் போகும் நூலில்
ஆதிமுதல் திரைப்பாடல் கவியாம், நல்ல
படைப்பாளர் பாஸ்கரதாஸ், கம்ப தாசன்,
பரமகுடி சிவராம லிங்கம் பிள்ளை,
மடமடெனக் கீர்த்தனைகள் இயற்ற வல்ல
மாயவரக் கவிராயர் தியாக ராசன்,
உடுமலையார் போன்றோருக் கிடம ளித்தே
ஒவ்வொருபாட் டேனுமிவர் எழுத வேண்டும்.

பலருடைய திரையுலக முன்னேற் றத்தைப்
பாடல்களால் படம்பிடித்துக் காட்டி யுள்ள
கலைவனத்தின் கலைமான்கள் என்னும் இந்நூல்
கலைத்துறைக்கோர் அகராதி போன்ற தாகும்.
நிலையான புகழ்க்குரிய செயல்செய் வோரே
நெருப்புவெயில் வட்டம்போல் நீடு வாழ்வர்.
கலைத்தொண்டு புரிந்துவரும் அம்மாப் பட்டி
கவிஞரிவர் வெற்றிபெற வாழ்த்து கின்றேன்.

---

■ *மணிபாரதியின் 'கலைவனத்தின் கலைமான்கள்' என்னும் நூலுக்கு 1988 - இல் வழங்கிய அணிந்துரை.*

# நிலா உலகும் பாராட்டும் எதிர்காலத்தில்!

பதினாறு வயதுமுத லாகத் தாரா
பாரதிக்குப் பாட்டெழுதும் பயிற்சி உண்டு!
நதிநீரை அதன்கரைகள் அறியும்; இந்த
நண்பர்கவித் திறமையைநான் அறிவேன்! முன்பு
'புதுவிடியல்' எனும்நூலைப் படைய லாக்கிப்
புகழ்பெற்று விளங்குமிவர் அடுத்த தாக
'இதுஎங்கள் கிழக்'கென்னும் புதிய நூலை
இப்போது நம்மவர்க்கு வழங்கி யுள்ளார்!

எல்லார்க்கும் பொதுவான வானம் தன்னை
'இதுஎங்கள் வான'மன்று சொல்வா ரில்லை!
எல்லாவர்க்கும் பொதுவான கதிரோன் தன்னை
'இதுஎங்கள் கதிரோ'னென் றுரைப்பா ரில்லை!
பல்லோரின் பாராட்டைப் பெற்ற தாரா
பாரதியென் கின்றகவி ராயர் மட்டும்
எல்லார்க்கும் பொதுவான கிழக்கை நோக்கி
'இதுஎங்கள் கிழக்'கென்று கூறு கின்றார்!

செங்கதிரோன் கீழ்த்திசையில் உதிப்ப தாலே
சிறந்ததிசை அத்திசைதான் என்று சொல்வேன்!
அங்கந்தச் செங்கதிரோன் உதிக்கா விட்டால்
அகிலத்தைக் காணமற்றோர் வெளிச்ச மேது?
தங்கவட்டம் தினம்உதிக்கும் கிழக்கை நூலின்
தலைப்பாகத் தேர்ந்தெடுத்த கவிஞர் தம்மை
மங்கலச்செந் தமிழ்மொழியில் வாழ்த்து கின்றேன்!
மறுமலர்ச்சிப் பாடல்தர வேண்டு கின்றேன்!

மூக்கில்லாக் காரணத்தால் வாயி னாலே
மூச்சுவிடும் தாமரைப்பூ ஒவ்வோர் நாளும்
நோக்குகின்ற திசைகிழக்குத் திசையே யாகும்!
நூதனப்பாட் டெழுதுபவர் அந்தப் பூவின்
போக்கைத்தான் பின்பற்றி உள்ளார் என்று
புரிந்துகொள்ள முடிகிறது பாட்டின் மூலம்!
தீக்கொழுந்துச் சூரியனுக் குரிய தான
திசைவிளக்கம் மிகச்சிறந்த விளக்க மாகும்!

'ஒருமைப்பா டேநமது குறைபா' டென்றும்
'உண்மையது போனதுவே சுடுகா' டென்றும்
'தருமம்போ யிற்றுவன வாச' மென்றும்
'தாயேபார் இதுதான்உன் தேசம்' என்றும்
பரிதாபப் படுகின்ற நண்பர் தாரா
பாரதிக்கு நினைவூட்ட விரும்பு கின்றேன்
பெருங்கவிஞர் திண்டிவனம் என்னும் ஊரில்
பிறந்தவரும் இவரைப்போல் புலம்பி யுள்ளார்!

“ஒருமைப்பா டென்னுமோர் உசிதவழக் கந்தனை
ஒருக்காலும் அறியாரே அண்ணே!
பெருமை குலைந்ததனால் புறத்தார்க்குக் கீழ்ப்பட்ட
பேதமை அறியீரோ அண்ணே!”

என்றிங்கோர் வழக்கறிஞர் இராம சாமி
இராஜென்னும் ‘பாரிடர்–அட்–லா’ என்பார்
அன்றிந்த நாட்டின்நிலை தனைய றிந்தே
ஆயிரத்தெண் ணூற்றெழுபத் தேழாம் ஆண்டில்
நன்றாகப் பாடிவைத்தும் இதுநாள் மட்டும்
நாட்டின்நிலை மாறவில்லை என்ப தாலே
இன்றிவரும் இவ்வாறு பாடி யுள்ளார்.
இந்தநிலை மாறும்நாள் எந்த நாளோ?

‘புதுவேகத் தோடெழுந்து வீட்டை விட்டுப்
புறப்படுக! உன்உள்ளங் கையில் உள்ள
விதிரேகை தனைக்கண்டு பயப்ப டாதே!
விரைந்ததனை விஞ்ஞான ரேகை யாக்கு!
கதைபேசித் திரியாதே தம்பி! நல்ல
காரியங்கள் செய்திடுக! என்று கூறும்
நதிவேகப் பாடல்களைப் படிப்போ மாயின்
நம்முடைய நடைவேகம் அதிக ரிக்கும்!

முன்னழகும் பின்னழகும், பூத்த பூவின்
முகத்தழகும் அமைந்தவளாம் 'ஆரம் பாலி'
என்பவளோ புத்தர்பிரான் வாழ்ந்த நாளில்
இருந்தவளாம்! அன்னவளோர் தாசிப் பெண்ணாம்!
தன்னுடைய சதைக்கதவைத் திறந்து காட்டி
தனம்சேர்த்து வந்தவளை ஒருவன் நோக்கி
'உன்னுடைய மதம்என்ன மதம்சொல்' என்றான்
'ஒப்பற்ற பௌத்தமதம்' என்று சொன்னாள்!

அரியணைமீ தமர்ந்திரண்டாம் ராச ராசன்
அரசாண்ட நூற்றாண்டில் தொண்டை நாட்டுத்
திருவொற்றி யூரதனில் வாழ்ந்து வந்த
தேவரடியாள் 'சதுரள் சதுரி' என்பாள்
கருங்கடலைப் பார்த்துக்கொண் டிருந்தாள்; நாகன்
காடனென்பான் அவளருகில் வந்து நின்று
'சரசகலா வல்லியுன்றன் மதம்யா' தென்றான்
'சைவமதம் எனதுமதம்' என்றாள் மங்கை!

அவரவர்கள் பின்பற்றும் மதத்தைப் பற்றி
அவ்விருவர் இவ்வாறு கூறி னாலும்,
இவருடைய படைப்பில்உரு வான தாசி
இதைப்பற்றி என்னசொல்லு கின்றாள் என்றால்
தவம்செய்யச் சொல்லுகின்ற மதமோ, புத்தர்
தாபித்த மதமோஎன் மதமே அல்ல,
எவர்வரினும் சம்மதித்துச் சரச மாடும்
'இன்பமதம்' எனதுமதம் எனச்சொல் கின்றாள்!

"வெறுங்கை என்பது மூடத்தனம்—உன்
விரல்கள் பத்தும் மூலதனம்!"

என்றிதுபோல் இதுவரையில் சொன்னா ருண்டா?
இத்தகைய சிந்தனைகள் ஒன்றா ரெண்டா?
அன்றிதுபோல் பாடியவன் பரிசு பெற்றான்!
அரங்கத்தில் அக்கவிஞன் பெருமை பெற்றான்!
இன்றிவர்க்குப் பரிசுதர ஒருவர் உண்டா?
எல்லாமே இப்போது 'வேடந் தாங்கல்!'
பன்றியின்பல் தேர்ந்தெடுக்கப் பட்டால், யானைப்
பல்லுக்கு மரியாதை கிடைக்கா தன்றோ?

இலக்கியவீ திக்கவிஞர் இயற்றி யுள்ள
'இதுஎங்கள் கிழக்'கென்னும் இந்நூல் என்னை
மலைக்கவைத்து விட்டதென்பேன் சிறந்த செய்யுள்
மணியோசை என்செவியைத் தொட்ட தென்பேன்!
தலைசிறந்த கவிஞரிவர் என்ப தாலும்
சாதிக்கும் திறனுடையார் என்ப தாலும்,
நிலைத்தபுகழ் இக்கவிஞர் பெறுவார் வெள்ளி
நிலாஉலகும் பாராட்டும் எதிர்கா லத்தில்!

---

■ *கவிஞர் தாராபாரதி எழுதிய 'இது எங்கள் கிழக்கு' என்னும் நூலுக்கு 1989 - இல் வழங்கிய அணிந்துரை.*

# வரலாறு !

தேமதுரத் தமிழ்ச்சங்கப் புலவ ரெல்லாம்
தினந்தோறும் கூடுதற்கு வழிவ குத்த
மாமதுரை அந்நாளின் சங்கப் பூராம்
வழிகாட்டும் நாடின்று சிங்கப் பூராம்.
மாமனொடு சிறுவயதில் கப்ப லேறி
வந்தவராம் சிங்கப்பூர் சுதர்மன் என்பார்
பூமிநடுங் கும்படியாய்ப் புரட்சி செய்து
புகழ்க்குரிய ராய்விளங்கும் வீர ராவர்.

முன்னோரின் வரலாற்றை எழுதி வைத்தல்
முறையாகும் என்பதனை ஏற்றுக் கொண்டோன்
தன்னுடைய வரலாற்றை எழுதி வைத்தல்
தற்பெருமை யாகுமென் றெண்ணி விட்டான்.
தன்னுடைய வரலாற்றை எழுதி வைத்தல்
தவறன்று; தற்புகழ்ச்சிக் குரிய தன்றாம்
என்பதனை நன்குணர்ந்த சுதர்மன், மக்கள்
எதிர்பார்க்கும் வரலாற்றை எழுதி யுள்ளார்.

அன்னவரோ தம்முடைய முதல்நூ லாக
    ஆர்ப்பரிக்கும் போராட்டப் படைய லாக
தன்னுடைய வரலாற்றை எழுதி யுள்ளார்.
    தமிழ்வேங்கை வீரத்தைக் காட்டி யுள்ளார்.
தன்னுடைய வரலாற்று நூலில், அன்று
    தள்ளாடிக் கொண்டிருந்த சமுதா யத்தின்
பின்னணியை நன்குபுலப் படுத்தி யுள்ளார்.
    பிரச்சினையைத் தெளிவாக விளக்கி யுள்ளார்.

என்னுடைய வரலாற்றை நானே இன்னும்
    எழுதாமல் இருக்கின்றேன். எழுது தற்கோ
இன்னவர்நூல் எனக்குவழி காட்டி யாக
    இருக்கின்ற தென்பதனை உணர்கின் றேன்யான்
தன்னுடைய வரலாற்றை எழுது தற்குத்
    தயங்குகின்ற எழுத்தாளர் கவிஞர்க் கெல்லாம்
இன்னவரோர் வழிகாட்டும் அறிஞ ராக
    இருக்கின்றார் இவர்வாழ்க! இவர்நூல் வாழ்க!

---

■ *சிங்கப்பூர் சுதர்மன் எழுதிய 'வரலாறு' நூலுக்கு 1989 - இல் வழங்கிய வாழ்த்துப்பா.*

# தமிழமுதன் கவிதைகள்!

புல்வெட்டும் தொண்டாலே தூய்மை செய்த
புரட்சிப்பா வேந்தரெனும் அப்ப ரைப்போல்
முள்வெட்டிச் சீர்திருத்தம் செய்யும் பாட்டால்
முன்னேற்றும் பெரியாரைத் தழுவி, வீட்டில்
கல்வெட்டிக் கருத்தளித்த கவிஞர், சாதி
கலப்புமணம் செய்துகொண்ட கவிஞர், சேரன்
வில்லைப்போல் வேகப்பாத் தொகுத்த ளித்தார்
விழியாக இருக்கின்றார், வாழ்த்து கின்றேன்!

எப்போதும் கருத்தோட்டம் துளிர்ப்ப தில்லை
எவர்துணையும் தொடர்ந்தாற்போல் கிடைப்ப தில்லை
அப்போதைக்(கு) அப்போது சிந்தித் தாலே
அவரவர்க்கும் அறிவுபலம் கூடு மென்பேன்!
இப்போதைக்(கு) இவர்பாடல் சமுதா யத்தில்
இருக்கின்ற சொத்தைகளைக் காட்டும் பாடல்
எப்போதும் இவர்பாடல் நிலைத்தி ருக்கும்!
ஏனென்றால் மடமையினும் தொடரு தன்றோ?

புதுக்கவிதை வடிக்கின்றார் நாளும் கோளும்
புனைகின்ற பொய்க்கருத்தைச் சாடு கின்றார்.
மதுக்கவிதை வழங்காமல் அனுப வத்தை
மயக்காமல் தருகின்றார் பெரியா ரைப்போல்
பதுக்காமல் கருத்துக்களை வழங்கு கின்றார்.
பாவேந்தர் நூற்றாண்டைத் தாண்டும் நீங்கள்
ஒதுக்காமல் இவர்பாட்டைப் படித்துப் பார்ப்பீர்!
ஒதுங்காமல் பாராட்டை அனுப்பி வைப்பீர்!

---

■ *கவிஞர் தமிழமுதன் எழுதிய 'தமிழமுதன் கவிதைகள்' என்னும் நூலுக்கு 1989 - இல் வழங்கிய அணிந்துரை.*

வாழ் -5

# செந்தமிழ் இன்பம்!

மூவேந்தர் நூற்றாண்டோ புயல்நூற் றாண்டு!
முன்னேறும் நூற்றாண்டோ செயல்நூற் றாண்டு
பாவேந்தர் நூற்றாண்டாம் இந்நூற் றாண்டோ,
பாவலர்க்குப் பெருமைதரும் நூற்றாண் டாகும்.
பாவேந்தர் நூற்றாண்டில் கொழுந்தம் பட்டுப்
பாவலராம் பண்பாளர் வரத ராசன்
நாவேந்தர் பாராட்டத் தக்க தான
நல்லதொரு செய்யுள்நூல் இயற்றி யுள்ளார்!

இந்நூலின் ஆசிரியர் வரத ராசன்
எவரிடத்தும் வழக்காட வராத ராசன்.
முன்கோபம், பின்கோபம் இலாத ராசன்
முத்தமிழை மூச்சாகக் கொண்ட ராசன்!
தன்னோடு தனிப்புகழைச் சேர்க்கும் ராசன்
தண்டாராம் பட்டுக்கோர் ராச ராசன்
அன்றுமுதல் இன்றுவரை இந்த ராசன்
ஆராய்ச்சி செய்துகொண்டே இருக்கும் ராசன்.

நிலஒதுக்கீ டில்லையென்றால் திணையு மில்லை
நிழல்ஒதுக்கீ டில்லையென்றால் வெயிலு மில்லை
இலைஒதுக்கீ டில்லையென்றால் மலர்கள் இல்லை
இடஒதுக்கீ டில்லையென்றால் வளர்ச்சி இல்லை
பலஒதுக்கீ டிருக்கட்டும், நானும் நூறு
பக்கங்கள் ஒதுக்குகின்றேன் பாட்டிற் காகக்
கலைஒதுக்கீ டதுமட்டும் இங்கே இல்லை
கவிஞர்களே என்கின்றார் வரத ராசன்!

கத்துகடல் என்கின்றார் காள மேகம்
கரைதழுவும் கருங்கடலென் றிவர்சொல் கின்றார்.
உத்தமியாம் கண்ணகிக்கேன் கோயில் இல்லை
ஓங்குபுகழ் தமிழ்நாட்டில் எனக்கேட் கின்றார்.
பத்துப்பாட் டென்னும்நூல் முதுநூல்; மக்கள்
பலர்க்குதவும் இந்நூலோ புதுநூல்! யாரும்
ஒத்துக்கொண் டாகத்தான் வேண்டும் இந்நூல்
ஒப்பற்ற நூல்சிறந்த நந்நூல் என்று!

தேங்காத சிந்தனைகள் பாக்கள் தோறும்;
தெளிவான எண்ணங்கள் இந்த நூலில்.
ஆங்காங்கே ஆராய்ச்சிக் குரிய பாடல்.
ஆற்றுக்கும், காட்டிற்கும் சிறந்த பாடல்.
வீங்காத வானத்தின் மீது நீந்தி,
விளையாடும் முகிலுக்கோர் வாழ்த்துப் பாடல்.
தூங்குயெனும் தலைமைப்பமைந்த துண்டுப் பாடல்
தூங்காத புகழ்க்குரிய பாட லாகும்!

வடநாட்டுக் கொடைவள்ளல் கர்ணன் என்பான்
வரலாற்றைப் பாடியுள்ள வரத ராசன்
கொடைவள்ளல் பாரியைஏன் இந்த நூலில்
குறிப்பிட்டுப் பாடுதற்கு மறந்து போனார்?
அடிவானம் தனைமுதலில் பார்ப்ப தற்கும்
அவ்வானில் எழும்கதிரை வாழ்த்து தற்கும்
தடுமாற்றம் வரலாமா? இந்தப் போக்கைத்
தமிழ்க்கவிஞர் பரம்பரையின் பற்ற லாமா?

நிறந்தங்கும் தாமரையும், அல்லிப் பூவும்
நீர்தங்கும் தடாகத்திற் கழகு செய்ய
மறந்திடுமா? சொல்லுங்கள்? இந்த நூலை
மறவாமல் வாங்குங்கள் விலைகொ டுத்து,
சிறந்தசெந் தமிழின்பம் எனும்பேர் கொண்ட
சிறுநூலாம் இந்நூலைப் படிக்க நேர்ந்தால்,
குறைந்தபுகழ் உடையோர்க்கும் கவிஞர் கட்கும்
கூடுதலாய்ப் புகழ்வந்து சேரும் என்பேன்.

---

■ *கவிஞர் பெ. வரதராசன் எம்.ஏ.எம்.எட். எழுதிய 'செந்தமிழ் இன்பம்' என்னும் நூலுக்கு 1990-இல் வழங்கிய அணிந்துரை.*

# பாட்டருவிப் பாவேந்தர்!

முதன்முதலில் எதையும்செய் என்று சொல்வர்
முந்திக்கொள் பிந்திக்கொள் ளாதே என்பர்
முதல்முயற்சி புதுமுயற்சி எனினும் அந்த
முயற்சிஒரு கோடாகும்; குறியீ டாகும்.
முதன்முதலில் அகராதி நிகண்டைத் தந்த
முனிவர்யார்? இரேவன்ன சித்தர் அன்றோ?
முதன்முதலில் குழந்தைஇலக் கியம்ப டைத்த
முன்னோடி கா.நமச்சி வாயர் அன்றோ?

நவாலெனும புதினத்தை முதலில் செய்யுள்
நடைநெல்லை பாலசுப்ர மணியன் தந்தான்
காவடிச்சிந் தெனும்நூலை முதலில் பாடிக்
கவிஅண்ணா மலைரெட்டி பெருமை பெற்றான்
ஏவிளம்பி வருடத்தில் பிறந்த செஞ்சி
ஏகாம்பர முதலியென்பான், தமிழ கத்துப்
பூவையர்க்குத் தேவையுள்ள சமையல் பாட்டுப்
புத்தகத்தை முதன்முதலில் இயற்ற லானான்.

எடுத்துவந்து கொடுத்திட்டான் இந்த நூலை
என்பெயரன் இளங்கோவன் என்னி டத்தில்
படுத்தபடி இந்நூலைப் படித்துப் பார்த்தேன்
பதிவுசெய்த பாக்களைஎன் நெஞ்சில் சேர்த்தேன்
அடிப்படைநூல் பலவற்றைப் படித்த பின்னர்
அன்பரிதை இயற்றியுள்ளார் என்ற றிந்தேன்
நடிப்பவர்கள் பாவேந்தர் சரித்தி ரத்தை
நாடகமாய் இனியேனும் நடத்த வேண்டும்!

மென்லோபார்க் என்கின்ற பெயரைக் கொண்ட
மேலான நகரத்தில், சாரா ஜோர்டான்
என்கின்ற மாரதரசி நடத்தி வந்த
எழில்வாய்ந்த உணவகத்தில் புதுமை யான
மின்விளக்கு முதன்முதலில் எரிந்த தென்பர்
மெச்சுபுகழ்க் குரியவராம் இவரும், இன்று
தன்விளக்காம் இக்கவிதை நூல்வி ளக்கத்தைத்
தமிழகத்தில் முதன்முதலாய் ஏற்றி யுள்ளார்.

கவிதையிலே முதன்முதலில் இதழ் நடத்திக்
காட்டியவர் பாவேந்தர் ஆவார். அந்தக்
கவியரசர் வரலாற்றைச் செய்யு ளாக்கிக்
காட்டியவர் இன்றிந்தக் கவிஞு ராவார்.
அவரதற்கு முன்னோடி அந்த நாளில்.
அக்டோபர் முதல்வாரம் தனில்பிறந்த
இவரிதற்கு முன்னோடி இந்த நாளில்.
என்பதைநான் எண்ணிஎண்ணி மகிழு கின்றேன்!

---

■ *புலவர் அருணா பொன்னுசாமி எழுதிய 'பாட்டருவிப் பாவேந்தர்' நூலுக்கு 1990 - இல் வழங்கிய அணிந்துரை.*

# பாராட்டுப்பா!

ஆரியனாம் இராமனவன் மனைவி சீத்தா
அன்றிருந்தாள் அசோகவனம் என்னும் காட்டில்!
காரியத்தில் கைதேர்ந்த இந்தச் சீத்தா
கண்திறந்த ஊர்தென்னார்க் காட்டில், காலைச்
சூரியனைச் சின்னமென அண்ணா கண்டார்
சுவைக்கவிஞர் இவரைஅவர் பின்னால் கண்டார்
நேரிழைபோல் பெண்பெயரைத் தேடிக் கொண்டார்
நேரிழைசேர் கவிநெசவு செய்து தந்தார்!

குச்சியைப்போல் இருந்தாலும் காந்தித் தாத்தா
கொண்டநடை வேகநடை இந்தச் சீத்தா
பச்சிலைபோல் இருப்பவர்தாம் இவர்தம் பாட்டில்
பாயுநடை பாகுநடை; இந்த நாட்டில்
அச்சுக்கலை வந்ததன்பின் தமிழில் பாடல்
அருகிவிட்ட தெனும்நினைப்பை மாற்றி விட்டோம்!
எச்சரிக்கை யாயிருக்க வேண்டும் என்றும்
இவர்பாட்டில் புரட்சிவெடி ஒளிந்தி ருக்கும்!

எனக்குப்பின் என்னைப்போல் எழுது கின்ற
எடைக்கவிஞர் சிலருக்குள் இந்தச் சீத்தா
கணக்கில்வரும் கூட்டல்தான்; இவர்தம் பாடல்
கனிஎன்றால் தப்பில்லை, சங்கப் பாடல்
பிணக்கில்லை தமிழ்ப்பாடல் அதனைப் போன்றே
பிணக்கின்றி தன்பயணப் பாட்டால் நாட்டில்
மணந்திடவே வருகின்றார் வாழ்த்து கின்றேன்.
மருந்தான இவர்பாடல் மடமை போக்கும்!

தொட்டாலும் பட்டாலும் சுருங்கு கின்ற
தொடைநடுங்கிப் பாவலர்கள் உண்டு! வாழ்வில்
கெட்டாலும் விட்டாலும் துவண்டி டாமல்
கிளர்ச்சிதரும் கவிஞர்தாம் இந்தச் சீத்தா!
தட்டாமல் தொண்டுசெய்யும் தொண்டர்க் குள்ளே
தகுதிமிக்க இக்கவிஞர் சிகரம் என்பேன்!
வெட்டுகின்ற இனத்தினிலே பிறந்த போதும்
விவேகத்தைக் கொண்டஇவர் என்றன் தோழர்!

பனப்பாக்கம் சீத்தாவின் பயணப் பாடல்
பாவேந்தர் வழிமரபில் பிறந்த பாடல்!
இனம்காக்கும் மொழிப்பாடல் பெரியார் கண்ட
இனமானப் பகுத்தறிவுப் பாடல் அன்பு
மனம்பார்த்துப் புகழுகின்றேன் என்னைப் போன்ற
மரபுவழிப் பாவலரைப், பாவேந் தர்போல்
இனம்பார்த்துப் பாராட்டு கின்றேன், மேன்மேல்
எழுதுகின்ற பாட்டாலே உயர்ந்து வாழ்க!

---

■ *கவிஞர் பனப்பாக்கம் கு. சீத்தா எழுதிய 'பனப்பாக்கம் சீத்தாவின் பாட்டுப்பயணம்' என்னும் நூலுக்கு 1990 - இல் வழங்கிய அணிந்துரை.*

# நெருஞ்சிப்பூக்கள்!

ஏட்டுப்பற் றுடையவர்கள் திரு.வி.க.வின்
ஏடுகளால் பெரும்பயனைப் பெறுதல் போலப்
பாட்டுப்பற் றுடையவர்கள் இந்த நூலைப்
படித்திட்டால் மிக்கபயன் பெறலாம்; மேலும்
நாட்டுப்பற் றுடையோர்க்கும்; சமுதா யத்தின்
நலன்கருதிப் பாடுபடும் தோழர் கட்கும்;
வீட்டுப்பற் றுடையோர்க்கும்; ஏனை யோர்க்கும்
மிக்கபயன் தரத்தக்க நன்னூல் இந்நூல்.

கோட்டுப்பூ எனச்சொல்வர்; கொடிப்பூ என்பர்;
குளத்துப்பூ எனச்சொல்வர்; புதர்ப்பூ என்பர்;
ஏட்டுப்பூ நம்வீட்டில் இருக்கு மாயின்
எண்ணத்தைப் புதிதாக்கும்; புலமை சேர்க்கும்;
தீட்டுவந்த தாமரைப்பூ தன்னில் இன்பத்
தேன்சுரக்கும்! அத்தேன்போல் இனிமை யுள்ள
பாட்டுக்கள் இந்நூலில் அதிகம்! இந்நூல்
பயனுள்ள பகுத்தறிவுப் பதிக மாகும்!

---

■ *பாவலர் க. மீனாட்சி சுந்தரம் எழுதிய 'நெருஞ்சிப் பூக்கள்' என்னும் நூலுக்கு 1991 - இல் வழங்கிய அணிந்துரை.*

# பாட்டருவி

பாக்களையும் பூக்களையும் பக்திக் காகப்
பயன்படுத்திப் பகுத்தறிவைப் பாழ்ப டுத்தித்
தூக்கத்தில் சமூகத்தை ஆழ்த்தி வந்த
துட்டர்களின் வாயடக்கி, அன்று வாழ்ந்த
சாக்கடைநீர்க் கவிஞர்களை விரட்டி வந்த
சைதாபு ரம்காசி விசுவ நாதர்,
ஊக்கத்தை உண்டாக்கத் தக்க தான
ஒப்பற்ற இசைப்பாக்கள் எழுதி வந்தார்.

காதல்நா யகம்பிள்ளை, சீர்தி ருத்தக்
கவிதைகளை எதிர்த்துவந்த நாளில், முன்சீப்
வேதநா யகம்பிள்ளை, தமிழர் வாழ்வு
வெற்றிபெற இசைப்பாக்கள் எழுதி வந்தார்.
ஆதரவு பெருகிவர கண்டோர், பின்னர்
அன்னவரைப் பின்பற்றி எழுத லானார்.
மூதறிஞர் பழனிபக் கிரியா பிள்ளை
முறியடித்தார் தெலுங்கிசையை அந்த நாளில்.

நரம்புகளில் ரத்தம்தான் ஓட வேண்டும்.
நதிநீரா ஓடுவது? தமிழ கத்தின்
அரங்குகளில் தெலுங்குமொழிப் பாட்டா? என்றே
ஆர்ப்பரித்தார் பாவேந்தர். அப்பா வேந்தர்
பரம்பரையைச் சேர்ந்தவரும், கண்ண தாசன்
பக்கத்தில் இருந்தவரு மான, வெற்றி
வரம்பெற்ற வரதகோ விந்த ராசன்
வரலாற்றுப் புகழ்க்குரிய ராச ராசன்.

புவிப்பெருமைக் குரியதமிழ் இலக்க ணத்தால்
புகழ்பெற்றோன் காஞ்சிகோ விந்த ராசன்.
செவிக்குணவு தந்துபெருங் கீர்த்தி பெற்றோன்
சீர்காழிச் செம்மல்கோ விந்த ராசன்.
கவியரங்கம் தனைப்படகில் நடத்தி நெஞ்சைக்
கவர்ந்தவனோ சேலம்கோ விந்த ராசன்.
அவையரங்கைச் சுவையரங்க மாக்கி, வெற்றி
அடைந்தவனோ வரதகோ விந்த ராசன்.

மானமிகு வரதகோ விந்த ராசன்
மறுமலர்ச்சி நினைவுகளின் நேசன். நீல
வானத்துச் சந்திரனில் இறங்கி, ஆங்கே
வாழ்வதற்கு விரும்புகின்ற கவிவிஞ் ஞானி.
சீனிசர்க்க ரைக்கவிஞன். வெற்றி வேந்தன்.
சிறைப்பறவை எனும்சிறந்த காவி யத்தைத்
தேனமுதம் போலினிக்கும் தமிழில், முன்பு
தீட்டிக்காட் டியதங்கம். சிந்துச் சிங்கம்.

இவருடைய முதல்நூலோ இதய ஓடை.
இக்கவிஞர் ஏறுவதோ பாட்டு மேடை.
இவருடைய புதுநூல்பாட் டருவி யாகும்.
இந்நூலோ பிறர்க்குதவும் கருவி யாகும்.
இவருடைய இசைப்பாடல் திரட்டீ தாகும்.
இந்நூலோ அமெரிக்கா வரையில் போகும்.
இவர்பார்க்க விரும்புவதோ தண்ணீர்க் காட்சி.
இவருடைய வெற்றிக்கோ இந்நூல் சாட்சி.

காடுபடு திரவியங்கள் ஐந்தாம் என்று
கற்றறிந்தோர் கூறியதற் கேற்ற வாறு
நாடு,மொழி, சமுதாயம், இயற்கை என்னும்
நான்கினையும் காதலையும் ஒன்று சேர்த்துப்
பாடுபொரு ளாயிவற்றைத் தேர்ந்தெ டுத்துப்
பாட்டருவி என்றிதற்குப் பெயர்கொ டுத்து
நீடுபுகழ்க் குரியதொரு புதிய நூலை
நிலாவெளிச்சம் போல்நமக்கு வழங்கி யுள்ளார்.

மண்ணுலகில் மட்டுந்தான் வேதமாக
வள்ளுவரின் குறளிருக்கும் என்ப தாக
எண்ணிக்கொண் டிருக்கின்றோம் நாமெல் லோரும்
இவ்வெண்ணம் நிச்சயமாய் விரைவில் மாறும்.
விண்வெளியி லம்சிறந்த வேத மாக
விளங்கப்போ வதுகுறள்தான் என்ப தான
எண்ணத்தை இக்கவிஞர் தெரிவித் துள்ளார்.
இதற்குமுன்னர் இவ்வாறு சொன்னார், உண்டா?

ஆடை கட்டி வந்த நிலவோ – கண்ணில்
மேடை கட்டி ஆடும் எழிலோ

என்கின்ற பாடலொன்றை அமுத வல்லி
எனும் படத்துக் கெழுதியவர் பட்டுக் கோட்டை.
அன்னவரின் திரைப்பாடல் அடையா ளத்தை
அப்படியே காட்டுகின்ற திங்கோர் பாடல்.
முன்னுருவை உடலென்று சொல்வர். அந்த
முன்னுருவாம் உடல்மீது மினுமி னுக்கும்
பின்னுருவை நிறமென்று சொல்வர். அந்தப்
பின்னுருவே இப்பாடல். இதோஇப் பாடல்.

அந்திவரும் நிலவுக்கு
முந்திவரும் பேரெழிலோ!
அடைகட்டி ஓடி வந்த
அற்புதந்தான் உன் உருவோ!

மேடுபள்ளம் இல்லாத வானம் தன்னில்
மிதந்துசெல்லும் வெண்ணிலவை நோக்கி ஓர்பெண்
பாடுவதாய் அமைந்திருக்கும் ஈரப் பாட்டும்,
பருதிவட்டம் போய்மறையும் நேரப் பாட்டும்,
நாடுதமிழ் நாடென்னும் நல்ல பாட்டும்,
நல்லனிச்ச மலரோஎன் கின்ற பாட்டும்,
மேடைதனில் அன்றாடம் முழங்க வேண்டும்.
மேலோர்க்கிந் நூலினைநாம் வழங்க வேண்டும்.

---

■ *கவிஞர் வரத கோவிந்தராசன் எழுதிய 'பாட்டருவி' என்னும் நூலுக்கு 1991 - இல் வழங்கிய அணிந்துரை.*

# மங்கியதோர் நிலவினிலே!

திசைமாறிப் போகாத தாசன்; நாட்டைச்
சீர்திருத்தப் பாடுபடும் பாட்டு தாசன்;
வசைமாறி பொழியாத தாசன்; வாச
வழிகாட்டும் அருட்பாவைப் பரப்பும் தாசன்;
அசைதாசன்; சீர்தாசன்; அகவல் தாசன்
அணிதாசன்; அந்தாதி தாசன்! கோவூர்
இசைதாசன் யாப்பறிந்து பாடும் தாசன்;
ஈரிரண்டு பட்டங்கள் பெற்ற தாசன்

தரணிபுகழ் எட்டையா புரத்து மன்னர்
சபையதனில் புலவர்கட்குத் தலைமை தாங்கி,
அருந்தமிழை வளர்த்தவர்ஓர் கர்ம யோகி;
அன்னவரே விருதைசிவ ஞான யோகி!
குருகுகதா சப்பிள்ளை வீட்டில் சான்றோர்
குழுவினர்முன் அன்றோர்நாள் அந்த யோகி,
பரவுபுகழ் சுப்ரமண்ய பார திக்குப்
பாரதிஎன் னும்பட்டம் வழங்க லானார்.

ஆயிரத்தெண் ணூற்றுத்தொண் ணூற்றி யாறாம்
ஆண்டதனில் பாரதியார் பட்டம் பெற்றார்
ஆயிரெத்தெண் ணூற்றெழுபத் தெட்டாம் ஆண்டில்
அறிஞர்களின் முன்னிலையில், கழுக்குன் றத்தில்
காயகற்பக் கவிராய ரான பூவை
கலியாண சுந்தரனார், சதாவ தானி
ஆயநல்லூர் சகந்நாத பிள்ளை மூலம்
அட்டாவ தானிஎன்னும் பட்டம் பெற்றார்.

அலையரங்கக் கருங்கடலில், படகின் மீதில்
அமர்ந்தபடி நீர்ப்பயணம் செய்தும்! சிற்பக்
கலையரங்கல் காட்சிதந்தும்; அவ்வப் போது
கவியரங்கில் பங்குபெற்றும், பரிசு பெற்றும்
மலைஉச்சி மீதமர்ந்து நிலவைப் பார்த்து
மகிழ்ச்சியொடு பாட்டெழுதும் கோவூ ரார்க்குத்
தலைசிறந்த இசைமேதை மதுரை சோமு
தத்துவநற் கவிஞரெனும் பட்டம் தந்தார்.

மந்தபுத்தி யுள்ளோரைத் திருத்த வேண்டி,
மங்கலங்கி ழார்யாத்த செல்லி யம்மன்
அந்தாதி அச்சாகி வெளியில் வந்த
ஆண்டதனில் பிறந்தவராம் கோவூர் தாசன்
அந்தாதி நூலெழுதிப் பெருமை பெற்றார்
அதற்குப்பின் பூக்கூடை பாக்கள் தந்து
சிந்தாம ணிக்கவிஞ ரானார் இன்றோ
தேன்கவிதை நூலொன்றை வெளியிட் டுள்ளார்.

மங்கியதோர் நிலவினிலே எனுமிந் நூலை
    மகிழ்ச்சியொடு பலமுறைநான் படித்துப் பார்த்தேன்
தங்குதடை இல்லாத விருத்தப் பாவில்
    தத்துவநற் கவிராயர் வழங்கி யுள்ள
நங்கூரச் சிந்தனைகள், இன்றும் என்றும்
    நமக்குதவி செயும்வார்த்தை வாக ஙங்கள்
எங்களுக்குப் புதுமைகளே வேண்டும் என்போர்
    இந்நூலைப் படித்திட்டால் பெறலாம் என்பேன்.

புழுவைத்த தூண்டிலிலே மீன்கள் சிக்கும்,
    புகழ்வைத்த தூண்டிலே மனங்கள் சிக்கும்
பழுதில்லா ஞானியரும் கூடப் பெண்கள்
    பருவத்தின் தூண்டிலிலே சிக்கிக் கொண்டு
விழுந்திடுவர் என்கின்றார் அவ்வாறாக
    விழாதபடி நாமிருக்க வேண்டு மென்று
முழுநேரக் கவிராயர் பாடியுள்ள
    முதற்தூண்டில் பரிசுபெற்ற கவிதை யாகும்!

பத்துக்கு மேலாடை பதினொன் றென்னும்
    பாட்டெனது பாட்டாகும்; இவரோ அந்தப்
பத்துக்கு மேலாடை பதினொன் றென்றால்
    பனைவிசிறி ஒன்பதுஉள் ளாடை யாகும்
ஒத்துக்கொள் வீராநீர் எனக்கேட் கின்றார்?
    ஒத்துக்கொள் கின்றேன்நான், பாக்கள் மூலம்
எத்திக்கும் தன்புகழைப் பரப்பும் கோவூர்
    இசைதாசன் கற்பனையை வரவேற் கின்றேன்.

தாடிவைத்த பெரியாரைப் பற்றி மட்டும்
தமிழ்க்கவிஞர் பாடுகின்றார், நான்கேட் கின்றேன்
நாடறிந்த பெரியாரின் மனைவி, அன்பு
நாயகியாம் நாகம்மை யாரைப் பற்றிப்
பாடுதற்கிங் கிதுவரையில் முயன்றார் உண்டா?
பாவலரே நீரேனும் அவரைப் பற்றிப்
பாடிடுவீர்! முதன்முதலில் சிறைக்குச் சென்ற
பண்பரசி வரலாற்றைப் படைப்பீர் பாட்டில்!

சமயசம ரசத்தோத்ரம் எனும்த லைப்பில்
தன்னூலை வெளியிட்டான் வேலூர்க் காரன்
சமயசம ரசக்கீர்த்தனம் எனும்த லைப்பில்
தன்னூலை வெளியிட்டான் குளத்தூர்க் காரன்
தமிழ்க்கவியே! மங்கியதோர் நிலவில் என்னும்
தலைப்பிட்ட கவிஞர்யார் முதலில்? அந்த
அமரகவி பாரதியா ரன்றோ? நீங்கள்
ஆக்கியநூல் அவர்தலைப்பில் உலவ லாமா?

---

■ *கவிஞர் கோவூர் இசைதாசன் எழுதிய 'மங்கியதோர் நிலவினிலே' என்னும் நூலுக்கு 1991 - இல் வழங்கிய அணிந்துரை.*

# பெருவாழ்வு வாழ்க!

பல்லவி

மணவிழா அன்று கண்டவரே – இன்று
மணிவிழாக் காண்பவரே!

அநுபல்லவி

இணைவேந்த ரே! தியாக பூமியே! – டாக்டர்
எம்.ஏ.எம்.ராம சாமியே!

சரணம்

அந்த நாளில் வாழ்ந்த பந்தன் எனும்வள்ளலை
ஔவை பாராட்டிப் பாடினாள் அந்தாதி – இன்று
இந்தநாள் உன்மணி விழாவுக் குரியதேதி
இணைவேந்தே கேட்பாய்என் இசைப்பாடல் அந்தாதி
(மணிவிழா)

பிறந்தநாள் அனைவர்க்கும் பொதுவாகும் – உங்கள்
சிறந்தநாள் இதுஇனி வரலாற்றில் பதிவாகும்
குறள்நெறிப் படிதினம் நடப்பவரே – வள்ளல்
குமணனைப் போல்அள்ளிக் கொடுப்பவரே! (மணவிழா)

சாதனை புரியும் ராமசாமிநீர் அல்லவா?
தமிழிசை வளர்த்தவர் உம்பாட்டன் அல்லவா?
நீதிக்கும் நேர்மைக்கும் நீர்எடுத்துக் காட்டல்லவா?–இந்த
நேரத்தில் உமைப்பற்றி மேலும்நான் சொல்லவா? (மணவிழா)

உன்பாட்டன் ஓர்மலை–ராஜா அண்ணாமலை
உன்தந்தை ஓர்முத்து–சர் முத்தையா–நல்ல
முன்னுரை பின்னுரை போன்றதன வணிகர்க்கு–இன்று
முதலெழுத் தாகநீ இருக்கின்றாய்! (மணவிழா)

பல்கலைக் கழகத்தை நிறுவியவர்–உன்
பாட்டன் என்பதை நாடறியும்!
கல்விக் காவலரே உம்மை கின்னஸ்
களஞ்சியப் புத்தகம் நன்கறியும்! (மணவிழா)

■ டாக்டர் சீர்காழி ஜி. சிவசிதம்பரம் தொகுத்து வழங்கிய 'மணிவிழா இசைக்கவிமலர்' நூலுக்கு 1991 - இல் வழங்கிய வாழ்த்துப்பா.

# சுவடுகள்

மதுக்கவிஞன் உமர்கையாம்; தமிழ கத்தின்
மழைக்கவிஞன் ஆசுகவி காள மேகம்;
கதைக்கவிஞன் தேரெழுந்தூர் கம்பன்; ஆற்றங்
கரைக்கவிஞன் சத்திமுற்றப் புலவ னாவான்;
துதிக்கவிஞன் அபிராமி பட்டன் வெற்றித்
துணைக்கவிஞன் அன்னையன்பன் என்பா ராவார்;
புதுக்கவிதைப் பந்தயத்தில் வெற்றி பெற்ற
புகழேந்தி அன்னையன்பன் புதல்வ னாவான்!

பத்துவய தினிலிவனோ பேச்சுப் பிள்ளை
பதினாறு வயதினிலே பாட்டுப் பிள்ளை
எத்திக்கும் தன்புகழைப் பரப்பப் போகும்
இப்பிள்ளை இப்போதோர் கவிதை நூலை
தித்திக்கும் தமிழ்மொழியில் இயற்றி யுள்ளான்.
சீர்திருத்தம் கூறியுள்ளான் இவனும் கொற்கை
முத்தைப்போல் பெரும்புகழைப் பெறுவா னென்பேன்.
மோனையைப்போல் முன்னிலையில் நிற்பா னென்பேன்.

■ *கவிஞர் பழ. புகழேந்தி எழுதிய 'சுவடுகள்' நூலுக்கு 1991 - இல் வழங்கிய அணிந்துரை.*

## அமுதமழை

அடைமழையில் நனையாதார் யாரும் இந்த
அகிலத்தில் இருந்ததுவாய்த் தெரிய வில்லை
முடிவேந்தர் நனைந்ததுண்டு மழையில். புத்தர்
முதலானோர் நனைந்ததுண்டு மழையில். அன்று,
நடுநாட்டில் பெருங்கனவாய் எனும்சிற் றூரில்
நம்அவ்வை யார்மழையில் நனைந்திட் டாராம்.
அடைமழையில் நான்நனைந்த கார ணத்தால்
அம்மழையைத் தேன்மழையென் றழைக்க லானேன்.

வான்மழைஎன் னும்நூலை ஒருவர் தந்தார்.
மற்றொருவர் பூமழைநூல் நமக்குத் தந்தார்.
தேன்மழைநூல் நான்தந்தேன். மழைநீர்ப் பாடல்
திரட்டொன்றைக் கு.சா.கிருஷ்ண மூர்த்தி தந்தார்.
ஆன்றோரும் சான்றோரும் புகழத் தக்க
அமுதமழை தந்துள்ளார் வரத ராசன்.
நான்தந்த தேன்மழைக்குப் பரிசு பெற்றேன்.
நண்பரிவர் நூலுக்கும் பரிசு கிட்டும்.

காதல் வாழ்வினிலே
மகிழ்ந்தோம்! கவலை தவிர்த்தோம்
நாம் கவலை தவிர்த்தோம்.

மாதர் என்னும் மலரும் – ஆண்
மக்கள் என்னும் வண்டும் குலவும் காதல்

அளவளாவும் போதில் பொழியும் – நல்
அமுத மழையில் நனைவதான மெய்க் (காதல்)

என்தங்கை எனும்படத்தில் பாவின் வேந்தர்
இவ்வாறு பாடலொன்றை எழுதி யுள்ளார்.
அன்னவரின் அமுதமழை அக்கா என்றால்
அன்பரிவர் அமுதமழை தங்கை யாகும்.
குன்றிலிட்ட விளக்கைப்போல் விளங்கும் இந்தக்
குறில்நெடில்நூல் மக்களைச்சீர் திருத்தும் நன்னூல்
என்பதனை இளைஞர்களும் மறுக்க மாட்டார்
என்போன்ற கவிஞர்களும் மறுக்க மாட்டோம்.

மூவேந்தர் காலத்தில் பாடப் பெற்ற
முத்திரைநூல் கலிங்கத்துப் பரணி யாகும்.
நாவேந்தர் காலத்தில் பாடப் பெற்ற
நறுந்தொகைநூல் நாலடியார் எனும்நூ லாகும்.
பூவேந்தர் காலத்தில் பாடப் பெற்ற
புதுப்புகழ்நூல் நளவெண்பா எனும்நூ லாகும்.
பாவேந்தர் காலத்தில் தோன்றி யுள்ள
பாட்டருவி நூல்அமுத மழைநூ லாகும்.

செயல்வரிசைச் சிந்தனைகள் இடம்பெற் றுள்ள
சிறப்பான நூலிந்நூல். நூலி லுள்ள
வெயில்வரிசைச் சிந்தனைகள் மூல மாக
வெளிச்சத்தை நாம்பெறலாம். நூலி லுள்ள
மயில்வரிசைப் பாடல்களைப் படிக்கும் போது
மலைநிலத்துப் பெருமைதனை அறிதல் கூடும்.
புயல்வரிசைச் சிந்தனைநூல் வரத ராசன்
புகழுக்குப் புகழ்சேர்க்கும் என்று சொல்வேன்.

ஆ! சிறியர் எனப்பிறரை இகழ்ந்தி டாத
ஆசிரியர் இயற்றியுள்ள இந்த நூலை
வாசித்தேன்; வாசித்து முடித்தேன். பாட்டில்
வடிந்திட்ட செந்தேனைக் குடித்தேன் ராஜா
தேசிங்கின் சுரங்களைப்போல் மிகவும் நீண்ட
செய்யுட்கள் ஒவ்வொன்றும் தேவை யுள்ள
சாசனங்கள் என்பதைநான் அறிந்து கொண்டேன்.
தற்கால தமிழகத்தைப் புரிந்து கொண்டேன்.

பல்லக்கில் அன்றாடம் ஏறிச் சென்ற
பள்ளிகொண்டான் பிள்ளையெனும் கவியும்; சைவ
எல்லப்ப நாவலரும், தொழுவூ ராரும்
இயற்றியதம் நூற்களிலே உலகம் போற்றும்
நல்லதிருக் குறள்கருத்தைப் பரப்பி யுள்ளார்
நம்கவியும் திருக்குறளைப் பரப்பி யுள்ளார்.
வல்லவராய் விளங்குகின்ற கொழுந்தம் பட்டு
வரதராசன் புரட்சிசெயும் தாசன் ஆனார்.

நீர்காத்தான் கரிகாலன் அணையைக் கட்டி
நிதியதனை அன்றாடம் அள்ளித் தந்து
பேர்காத்தான் பாரிவள்ளல். தொண்டை நாட்டுப்
பெரும்புலவன் தீப்பாய்ந்து நட்பைக் காத்தான்.
சீர்காத்தும் தளைகாத்தும் அடிகள் காத்தும்
செய்யுட்கள் இயற்றிவரும் வரத ராசன்
பேர்காத்துக் கொளவேண்டின் இந்நூல் போதும்
பெருஞ்செல்வம் பெறவேண்டின் முயற்சி வேண்டும்.

புதுக்கவிதைஉரைநடையின் மறுபக் கந்தான்
புகழ்பெற்ற ஹைக்கூவோ இதன்பக் கந்தான்.
மதுக்கவிதை உமர்கய்யா மின்பக் கந்தான்
மகிழ்மணிமா லைமுகைய தீன்பக் கந்தான்.
சதிர்க்கவிதை குஞ்சரபா ரதிபக் கந்தான்
சன்மார்க்கப் பாடல்வள்ள லார்பக் கந்தான்.
எதிர்க்கவிதை ஒட்டக்கூத் தரின்பக் கந்தான்
இன்றுமுதல் இப்புதுநூல் என்பக் கந்தான்.

---

■ *கவிஞர் பெ. வரதராசன் எழுதிய 'அமுதமழை' என்னும் நூலுக்கு 1991 - இல் வழங்கிய அணிந்துரை.*

# கவிதாவின் கவிதைகள்!

இளந்தளிரின் கவிதையெலாம் இளநீர்ப் பாட்டே!
இன்புற்றேன் தேன்மொழியின் கவிதை கேட்டே!
வளர்ந்தவனென் வாழ்த்தினையே பெறுவோ ரெல்லாம்
வளம்பெறுவர் வைரமுத்தும் இதற்குச் சான்று!
தளமமைத்துக் கொடுப்பதற்கு தாத்தா, பாட்டி,
தமிழ்க்கவிஞர் அன்னையன்பன் போன்றோர் உண்டு!
இளம்செல்வி கவிதாஉன் பிறந்த நாட்கள்
இன்றேபோல் இனிமேலும் சிறக்க வேண்டும்.

■ கவிஞர் தேன்மொழி கவிதா எழுதிய 'கவிதாவின் கவிதைகள்' என்னும் நூலுக்கு 1991 - இல் வழங்கிய வாழ்த்துப்பா.

## அஞ்சலிப் பூக்கள்

கூற்றுமுனை ஒருயிரின் கழித்த லாகும்.
குடும்பமுனை ஒருயிரின் கூட்ட லாகும்.
மேற்றிசைதான் சூரியனின் சுடுகா டாகும்.
மென்மலர்க்கு மரத்தடிதான் இடுகா டாகும்.
வேற்றுமையும் ஒற்றுமையும் சண்டை போடும்
விபரீத உலகத்தில் நம்மெல் லோர்க்கும்
காற்றுள்ள வரையில்தான் மூச்சும் பேச்சும்!
கண்மூடி விட்டால்நம் கதையே மாற்றம்!

உறவினரின் மகளான இந்தி ராணி
உயிர்நீத்த நாள்முதலாய் இதுவ ரைக்கும்
உருவான இரங்கற்பாக் களைத்தி ரட்டி
ஒன்றாக்கி, அஞ்சலிப் பூக்க ளாக்கிப்
பெருவாழ்வு வாழாமல் போய்விட் டாயே!
பெண்மணியே! கண்மணியே! எனப்பு லம்பும்
கரும்புமுத்துக் கவிஅரங்க ராச னாரின்
கண்ணீரின் காணிக்கை இந்நூ லாகும்.

நிதிக்கரையாய் விளங்குகின்ற அமெரிக் காவில்
நெளிந்தோடும் ஆமேசா எனும்பேர் கொண்ட
நதிக்கரையில் ஐம்பதடி நீள முள்ள
நல்லிலையைக் காட்டுகின்ற மரமொன் றுண்டாம்!
அதைநமக்கு நினைவூட்டும் வகையில், இந்நூல்
அமைந்திருக்கக் காணுகின்றேன்! தமிழ கத்தில்
இதுவரையில் மிகநீண்ட இரங்கற் பாடல்
இவரைப்போல் எழுதியவர் யாரு மில்லை.

---

■ *கவிஞர் கா. நா. அரங்கநாதன் எழுதிய 'அஞ்சலிப் பூக்கள்' எனும் நூலுக்கு 1992 - இல் வழங்கிய அணிந்துரை.*

# குழந்தைகளே வாருங்கள்!

குழந்தைக்குத் தருங்கல்வி கொழுந்துக் கல்வி
குழந்தைப்பாட் டென்பதுவும் கொழுந்துப் பாட்டே.
அழ.வள்ளி யப்பாவோ, குழந்தைப் பாட்டுக்
கரசனென விளங்கியவர். என்னி டத்தில்,
'குழந்தைகளே வாருங்கள்' என்னும் நூலைக்
கொடுத்தவராம் துரைஅன்பரசன் என்பார். தேமாம்
பழத்தமிழில் சிறுவர்களுக் கேற்ற வாறு
பாட்டெழுதிக் காட்டுவதில் கெட்டிக் காரர்.

சிந்துதுரை அன்பரசன் அவர்யார் என்றால்,
சென்னிகுளம் ரெட்டியெனத் துணிந்து சொல்வேன்.
கந்ததுரை அன்பரசன் இவர்யார் என்றால்
கதிர்வெளிச்சக் கருத்தரசன் இவரே என்பேன்.
எந்ததுரை அன்பரசன் எழுதி னாலும்
இவர்வெல்வார் அருணகிரி நாதர் போன்று
முந்துதரை அன்பரசன் இவரே என்பேன்
முழுப்புதுமை புகுத்துபவர் இவரே என்பேன்.

கனைக்கின்ற கருங்கடலைப் பற்றி, நீந்தும்
கண்ணாடி என்கின்ற நிலவைப் பற்றிப்
பனிஇமய மலைபற்றி, நாட்டைப் பற்றிப்
பயனுள்ள தொலைக்காட்சி தன்னைப் பற்றித்
தனிப்பெருமைக் குரியவராம் பெரியார் பற்றித்
தன்மானப் பாவேந்தர் பற்றி இந்தப்
பனிக்கவிஞர் சிறப்பாகப் பாடி யுள்ளார்
பாராட்டுக் குரியவராய் ஆகி யுள்ளார்.

காவியத்தின் சேமிப்பே பாக்க ளாகும்,
கட்டுரையின் சேமிப்பே திறனாய் வாகும்.
பூமியதன் சேமிப்பே மலைக ளாகும்.
புகழ்பெற்றோன் சேமிப்பே வரலா றாகும்.
தாவரத்தின் சேமிப்பே கனிக ளாகும்.
தடாகத்தின் சேமிப்பே தண்ணீ ராகும்.
கோவையில்வாழ் இக்கவிஞர்க் கிந்த நூலில்
குடியிருக்கும் பாடல்களே சேமிப் பாகும்!

சீத்தலைச்சாத் தனார்பிறந்த நாட்டில் இன்று
சிந்தனைச்சாத்தனாராக விளங்கு கின்ற
பாத்திறப்பாட் டுக்கவிஞர் சிறுவர்க் காகப்
பாடியுள்ள பாக்களைநாம் படிக்க வேண்டும்
ஆத்தோரம் கொடிக்காலாம் கொடிக்கால் தன்னில்
அரும்பரும்பா வெற்றிலையாம் என்றிந் நாட்டில்
காத்தையன் பாடட்டும். இவ்வ ரும்புக்
கவிதைகளைப் படிக்கட்டும் சிறுவ ரெல்லாம்.

---

■ *பாவலர் கந்த. துரை அன்பரசன் எழுதிய 'குழந்தைகளே வாருங்கள்' என்னும் நூலுக்கு 1992 - இல் வழங்கிய அணிந்துரை.*

# கவிதைப் பூங்கா!

தேயாத எழுத்துக்குச் சொந்தக் காரர்
தென்னையைப்போல் பயன்கொடுக்கும் கபில வாணன்
ஓயாத பேருழைப்பால் பூங்குன் றன்போல்
ஊரறிய உலகறிய வளர கின்றார்.
வாயார எடுத்துரைத்து, கவிதைப் பூங்கா
வரவறிந்து மகிழுகின்றேன். அதிய மான்போல்
தாயாதல் பெண்ணுக்குப் பெருமை; அந்தத்
தகுதியினை இவர்பெற்றார் இந்த நூலால்!

உவமைகளை வைப்பதிலே, என்னைப் போல
உருவகச்சொல் படைப்பதிலே திறமை யுள்ளார்,
தவக்கோலக் கபிலவாணன் குழந்தை கட்குத்
தரமான இலக்கியமாய் இதனைத் தந்தார்.
விமான தொலைக்காட்சிக் கோபு ரத்தை
நவிலுகிற பாங்கெண்ணிப் போற்று கின்றேன்.
சுவரெல்லாம் தாசுமகால் ஆவ தில்லை;
சொல்லாட்சிக் கவிஞரிவர் கொற்கை முத்து!

தெருக்களைநாம் சுத்தமாக வைத்துக் கொள்ளத்
தெரியாமல் இருக்கின்றோம் வீணா கின்றோம்!
கருப்புநிறக் காக்கைகளோ, தெருவைச் சுத்தம்
செய்கின்ற குத்தகையை எடுத்துக் கொண்டு
திருத்தொண்டு செய்கிறதாய்ப் போற்று கின்றார்!
திருவள்ளுவ ரைவணங்கக் கூறு கின்றார்
நெருப்புவிழிப் பாரதியை பாவின் வேந்தை
நினைந்துருகிப் பாடியுள்ள விதமும் நன்று.

கல்வெட்டுக் கவிராயர் நாட்டி லுண்டு
காசுக்குப் பாட்டெழுதி விற்போ ருண்டு;
மல்லுக்கு நின்றுபெரும் விருது வாங்கும்
மாக்கவியும் உலகிலுண்டு; கபில வாணன்
சொல்லுக்குச் சுவைசேர்க்கும் புதிய கம்பன்
சுடர்களையே கவியாக்கிக் கொடுக்கும் கம்பன்.
பல்லுக்கு உறுதிசெயும் விழுதைப் போல
பாட்டுலகிற் கிவர்நன்மை செய்தல் உண்மை.

வேடநரி ஆடொன்றைக் கொன்று நின்ற
விதம்கூறும் பாங்காலே நாட்டிற் கேதோ
பாடந்தான் சொல்லுகின்றார் குறியீ டாக
பாவலரின் உத்தியினை ஆழ்ந்து பார்த்தால்
ஊடகமாய் உள்ளபொருள் தெரிந்து போகும்!
உலுத்தர்களின் பகல்வேடம் களைந்து போகும்.
நாடறிந்த கவிஞரிவர் இமயம் போலே
நாளைக்கே புகழ்பெறுவார் வரவேற் கின்றேன்.

■ கவிஞர் கபிலவாணன் எழுதிய 'கவிதைப்பூங்கா' என்னும் நூலுக்கு 1992 - இல் வழங்கிய அணிந்துரை.

# ஐக்கூ அந்தாதி!

**வெண்பாவில் புகழேந்தி விருத்தம் என்னும்**
**ஒண்பாவில் உயர்கம்பன் என்பதைப் போல்**
**மின்பாவாம் ஐக்கூவில் அமுதோன் என்னும்**
**அமுதபாரதி என்பேன் ஆமாம் உண்மை.**

■ *ஓவியக்கவிஞர் அமுதபாரதி எழுதிய 'ஐக்கூ அந்தாதி' என்னும் ஐக்கூ கவிதை நூலுக்கு 1992 - இல் வழங்கிய வாழ்த்துப் பா.*

# வெண்ணந்தூர் வெண்ணிலாவின் கவிதைகள் !

மண்வெற்றி மன்னன் வெற்றி
மழைவெற்றி முகிலின் வெற்றி
பண்வெற்றி இசையின் வெற்றி
பகல்வெற்றி கதிரோன் வெற்றி
வெண்ணந்தூர் தன்னில் வாழும்
வெண்ணிலா என்ற பெண்ணின்
எண்ணத்தின் வெற்றி இந்நூல்.
இந்தநூல் நமக்கு நன்நூல்.

பண்பட்ட புலவ ரான
பாவலர் பரமா னந்தர்
வெண்ணந்தூர்க் கார ராவார்.
வெண்ணிலா என்ற பெண்ணும்
வெண்ணந்தூர்ச் செல்வி யாவார்.
வெற்றிவா கனத்தில் போவார்.
எண்ணத்தில் ஊஞ்ச லாடும்
இவர்புகழ் உலகைச் சுற்றும்.

---

■ *கவிஞர் வெண்ணந்தூர் வெண்ணிலா எழுதிய 'வெண்ணந்தூர் வெண்ணிலா கவிதைகள்' என்னும் நூலுக்கு 1992 - இல் வழங்கிய வாழ்த்துப்பா.*

வாழ்-7

# பதிப்புச்செம்மல் மணிமாலை!

கையப்பன் யாரென்றால், பாரி வள்ளல்
கவியப்பன் யாரென்றால் கம்ப நாடன்
செய்யப்பன் யாரென்றால் பள்ளிக் கல்வித்
திட்டத்தை சென்றநூற் றாண்டில் தந்தோன்
மெய்யப்பன் திரைப்படத் துறைமுன் னோடி
மெச்சுபுகழ்க் குரியவராய் விளங்கும் மற்றோர்
மெய்யப்பன் யாரென்று கேட்டால், அந்த
மெய்யப்பன் மிகச்சிறந்த பதிப்புச் செம்மல்!

ஓதுகலை வாணர்க்கும் மற்ற வர்க்கும்
ஒப்பந்த நூற்பதிப்பின் மூல மாகச்
சாதனைகள் புரிந்துவரும் செட்டி நாட்டுத்
தங்கமிவர் மணிவிழாக் காணு கின்றார்.
அதலினால் நானிவரை வாழ்த்து கின்றேன்.
அறுபதென்ன எழுபதென்னா,எண்ப தென்ன,
மேதகுச. மெய்யப்பன் சித்தர் போன்று
மேதினியில் நெடுங்காலம் வாழ்வா ராக!

■ மெ. மீனாட்சிசோமசுந்தரம் தொகுத்த 'பதிப்புச் செம்மல் மணிமாலை' என்னும் நூலுக்கு 1993 - இல் வழங்கிய வாழ்த்துப்பா.

# திசைகளில் வீசிய ஓசைகள்!

எண்ணங்கள் பலர்க்குண்டு! அவற்றை நன்றாய்
எடுத்தியம்பும் ஆற்றலொரு சிலர்க்கே யுண்டு!
வண்ணங்கள் தூவியதில் சொற்கோ லங்கள்
வரைகின்ற நேர்த்தியொரு சிலர்க்கே உண்டு!
இன்னுங்கேள் எனச்சொல்லிக் கேட்போர் நெஞ்சை
ஈர்க்கின்ற பாங்குமிகச் சிலர்க்கே உண்டு!
கண்ணுக்குள் கனவுகளைக் கொண்டு வந்து
கடிவாள மிடுந்திறமை சிலர்க்கே உண்டு!

புதியதொரு சொல்லோட்டம்! வடிவ மைத்த
புதுமைக்கோர் வெள்ளோட்டம்! பொதிகைத் தென்றல்
சதிராடி வருமுத்தி! நடையோ தேனீச்
சாதனையை வென்ற நடை! எழுச்சி மிக்க
அதிர்வுகளை நம்மிடையே தோற்று விக்கும்
அரங்கேற்றம்! அதிகாலைச் சூரி யன்போல்
உதித்தெழுந்து வெப்பத்தைப் பாய்ச்சு கின்ற
உணர்ச்சிமிகு புதுக்கவிதைத் தொகுப்பே இந்நூல்.

இப்படித்தான் இதுகருத்தைச் சொல்லும்! வானின்
எல்லைகளை இதுகடந்து வெல்லும்! வெற்றுக்
கற்பனையைப் புறந்தள்ளும்! நெஞ்சை அள்ளும்!
காலத்தை இதுவெல்லும்! உள்ளந் துள்ளி
வற்புறுத்தி வருங்கொள்கைப் பிடிப்பை ஒவ்வோர்
வார்த்தைகளும் தோரணமாய்க் கோர்த்துக் கொள்ளும்!
கொப்பளிக்கும் சிந்தனையை ஒப்பு விக்கும்!
குமுகாய வளர்ச்சிக்கும் வழிவ குக்கும்!

வான்கொண்ட மின்னலுக்கேன் விளம்ப ரங்கள்!
வைரத்தின் கூர்மைக்கேன் சான்றி தழ்கள்!
தேன்கொண்ட தாமரைக்கேன் வண்ணப் பூச்சு!
செங்கதிரின் வருகைக்கேன் கட்டி யங்கள்!
நான்கொண்ட திறமையினை நெஞ்சில் கொண்ட
நற்கவிஞர் இக்கவிஞர்! எனவே இந்த
வான்முகிலை வடிவேல னாரை, மேடை
வலம்வந்த இத்தொகுப்பை வாழ்த்து கின்றேன்.

வெட்டிவைத்த செங்கரும்பும் இனித்தி டாதா?
வேர்விட்ட நாற்றங்கால் விளைவு றாதா?
கட்டவிழ்க்கும் முல்லை--மணம் பரப்பி டாதா?
கவிஞரது இத்தொகுப்பும் புகழ்பெ றாதா?
அட்டியின்றிச் சொல்லுகிறேன் திசைகள் தோறும்
அரங்கேறி வந்துள்ள இந்த ஓசை
தொட்டிழுத்து நம்மனதில் ஒட்டிக் கொள்ளும்!
தொடர்ந்து வரும் வரலாற்றில் தொற்றிக் கொள்ளும்!

---

■ *கவிஞர் வடிவேலன் எழுதிய 'திசைகளில் வீசிய ஓசைகள்' என்னும் நூலுக்கு 1993 - இல் வழங்கிய அணிந்துரை.*

# கவிதைத் தென்றல்

உச்சிமலை மீதிருக்கும் பிள்ளைச்சாமி
ஊரான திருச்சிக்கு அருகிருக்கும்
பச்சைவயல் தோப்புநிறை பெரம்பலூரில்
பாடுதற்குப் பிறந்தவரே பொன்னுசாமி!
உச்சரித்து நாம் வாழும் தமிழுக்காக
உயிர்நீத்தான் தீக்குளித்துச் சின்னசாமி!
அச்சாமி உலவிவந்த மாவட்டத்தில்
அரும்புவிட்ட கவிஞர்தான் பொன்னுசாமி!

சாப்பாட்டுப் கேபஞ்சம் இந்த நாட்டில்
சாமிக்கும் சாதிக்கும் பஞ்சமில்லை!
வாய்ப்பாட்டு அரசியலால் ஊரை ஏய்த்து
வசதிபெற்ற ஆசாமி பலபேருண்டு!
தாய்ப்பாட்டாம் நாதசுர இசையினாலே
தகுதிபெற்றார் சேதுராமன் பொன்னுசாமி!
தூயகலை ஞர்யதார்த்தம் பொன்னுசாமி
துறைதோறும் தேர்ந்தவர்இப் பொன்னுசாமி!

மெல்லினமாம் புல்லினத்தின் விசுவரூபம்
மூங்கிலினம் அதைக்கூடக் கவிதையாக்கிச்
சொல்லுகின்ற விதம் நம்மைச் சொக்க வைக்கும்!
செங்கல்லின் சிறப்புகளை இதுவரைக்கும்
வல்லகவி இவரைப்போல் சொன்னதில்லை
வரலாற்றுச் சான்றுகளை வடித்துவைத்தே
நல்லகவி படைத்துள்ளார்! நன்றியோடு
நண்பர்களைத் தன்கதையில் குறிப்பிட்டுள்ளார்!

புகைக்கின்ற கல்லுண்டா? உண்டென்கின்றார்
புகைகிளப்பும் பாறைகளே ஒகேனேக்கல்லாம்!
திகைக்கின்ற சொல்விளக்கம்! நூல் முழுக்கத்
தீம்பாடல் ஏந்திவரும் 'கவிதைத் தென்றல்'
சுகப்பயணம் சென்றுவந்த அனுபவத்தைச்
சுவையான பாடல்களால் வருணிக்கின்றார்!
மிகைப்படுத்திச் சொல்லவில்லை இசைய வைக்கும்
மெல்லிசைக்கோர் கவிஞர்தான் பொன்னுசாமி!

தென்றலினைப் பாடாத கவிஞரில்லை!
தென்றல்வந்து தீண்டாத மனித ரில்லை!
நின்றமலை முடியிருந்து கொட்டுகின்ற
நீள்அருவிநீராடி உலகமெல்லாம்
சென்றுவரும் மக்களுக்கு உயிர்ப்பை நல்கும்
தென்திசையின் தாலாட்டே தென்றலாகும்!
பொன்னுசாமி பலகாலம் தவமிருந்து
பெற்றெடுத்த செல்வம்தான் 'கவிதைத் தென்றல்!'

பிள்ளைபெறத் தானிங்கே கட்டுப்பாடு!
    பேசுதற்கும் எழுதுதற்கும் பாடுதற்கும்
அள்ளியணைத் தின்புற்று, மகிழுதற்கும்
    அருந்தமிழில் பாட்டெழுதிக் குவிப்பதற்கும்
உள்ளபடி இங்கில்லை கட்டுப் பாடு!
    ஊற்றெடுக்கும் உணர்வுகளைக் கவிதையாக்கிப்
பள்ளத்தில் கிடக்கிறதே தமிழச் சாதி
    பயனுறவே படைத்திடுவோம் கவிதை! வாரீர்!

---

■ *இசைக்கவிஞர் டாக்டர் பொ. இல. பொன்னுசாமி எழுதிய 'கவிதைத் தென்றல்' என்னும் நூலுக்கு 1993 - இல் வழங்கிய அணிந்துரை.*

# அருள்நெறி காட்டிய அமைச்சர் சேக்கிழார்!

சொல்லாமல் செய்வார்கள் சிலபேர்; என்ன
சொன்னாலும் செய்யாதார் பலபேர்; மற்றோர்
சொல்கின்ற கருத்துக்கள் தம்மைக் கேட்டும்
சுயமாகச் சிந்தித்தும் செயலைச் செய்வார்
முல்லைமலர்க் கவிதைகளை முகிழ வைக்கும்
மூத்தகவி இசைதாசன் தன்னை ஓர்நாள்
"தொல்லுலகில் புகழ்பெற்ற சான்றோர் மீது
தொடுத்திடுக நூலொன்று" என்று சொன்னேன்.

தொண்டர்சீர் பரவுகின்ற வகையில் நல்ல
தூயதமிழ்த் "திருத்தொண்டர் புராணம்" செய்த
அண்டையிலே அமைந்திட்ட குன்றத் தூரில்
அவதரித்த புலவரவர் சேக்கி ழாரின்
மண்டுபுகழ் வரலாற்றுச் சரிதம் தன்னை
வடிக்கின்றேன் கவிநூலாய் என்றார், சொன்ன
வண்ணம்"சேக் கிழார்"நூலை வழங்கி விட்டார்
வாக்குறுதி காத்திட்டார் வாழ்த்து கின்றேன்.

---

■ *கவிஞர் கோவூர் இசைதாசன் எழுதிய 'அருள்நெறி காட்டிய அமைச்சர் சேக்கிழார்' என்னும் நூலுக்கு 1993 - இல் வழங்கிய வாழ்த்துப்பா.*

# தாகத்தின் தழும்புகள்

புதுக்கல்லூ ரியில்பயிலும் ராம கிருஷ்ணன்
    புதுக்கவிதை எழுதவல்லார் என்ப தற்கு
முதல்சாட்சி, தாகத்தின் தழும்பென் கின்ற
    முதல்நூலாம் இந்நூலே யாகும். இந்த
நதிக்கவிதை நூலிவர்க்குப் பெருமை சேர்க்கும்
    நாடெங்கும் புகழ்பரவும் இந்த நூலில்
பதிந்துள்ள சிந்தனைகள் சீர் திருத்தப்
    பதிகங்கள்! புதுக்கவிதைப் புகைப்ப டங்கள்!

தாகத்தின் தழும்புகளென் கின்ற தான
    தலைப்பமைந்த இந்நூலை நானோ, ஈர
மேகத்தின் அழுகைஎனும் மழைநீர் என்பேன்.
    வீரத்தின் முத்திரையாம் விழுப்புண் என்பேன்.
நாகரிக கண்ணோட்டத் தோடும் செஞ்சொல்
    நயத்தோடும் இக்கவிஞர் வழங்கி யுள்ள
பாகுபொதி புதுக்கவிதைப் படைப்பை, நாடு
    பாராட்டும்! பலரும்பா ராட்டு வார்கள்!

---

■ கவிஞர் அ. இராமகி எழுதிய 'தாகத்தின் தழும்பகள்' என்னும் கவிதை நூலுக்கு 1993 - இல் வழங்கிய அணிந்துரை.

# பூமிக்கு புதிய திசை!

வைத்தபெய ரோ'வரதன்' ஆனால் இன்று
வழங்கிவரும் புதுப்பெயரோ 'காள மேகம்!'
வைத்தபெய ரோ'குழந்தை' ஆனால் இன்று
வழங்கிவரும் பெயர்'சாந்துப் புலவ' ராகும்!
வைத்தபெய ரோ'பழநியப்ப' னாகும்
வழங்குபெயர் 'மாம்பழக் கவிஞ' ராகும்!
வைத்தபெய ரோ'வெள்ளைச் சாமி' யாகும்
வழங்குபெயர் 'பாஸ்கரதாஸ்' என்பதாகும்!

'பூமிக்குப் புதியதிசை' என்ப தான
புத்தகத்தை எழுதியுள்ள கவிஞ ரான
தாமரைப்பூப் போற்சிறந்த 'சீனி வாசன்'
தம்பெயரை 'மலர்மக'னாய் மாற்றிக் கொண்டார்!
நாமிவரைச் சந்தித்தால், 'வணக்கம் வாழ்க
நலந்தானா?' எனக்கேட்பார்! இவர்தம் வீட்டில்
சேமித்து வைத்துள்ள புத்த கத்தைத்
தினந்தோறும் படிப்பவராம் என்னைப் போல!

அமர்நீதி நாயனார் சரித்தி ரத்தை
அழகான கீர்த்தனைகள் மூல மாக
நமக்களித்த பெரும்புலவர் 'வைத்ய லிங்கம்'
நாடறிந்த ஓவியராம் அந்தந ாளில்!
சமசதுரக் கவிஞர்'மலர் மக'னென் பாரோ
தலைசிறந்த ஓவியராம் இந்த நாளில்!
இமயமலைக் கவி'தார பார தி'க்கோ
இவர் அண்ணன் தற்காலக் கவிதை மன்னன்!

சாமிக்குப் புதுக்கோயில் வேண்டு மென்று
சாரதியும் பாரதியும் பாடி யுள்ளார்.
காமிக்குப் புதுவீடு வேண்டு மென்று
கச்சியப்பன் குச்சியப்பர் பாடி யுள்ளார்!
பூமிக்குப் புதியதிசை இதுதான் என்று
புலவர்களோ கவிஞர்களோ காட்ட வில்லை
பூமிக்குப் புதியதிசை இதுதான் என்று
புதுக்கவிஞர் இவரன்றோ காட்டு கின்றார்!

நாட்குறிப்புக் குதவுகின்ற நிலவின் மீது
நடந்துசெல்ல விரும்புமிவர், ஒவ்வோர் நாளும்
ஆட்குறிப்புக் குதவுகின்ற ஓவி யங்கள்
அழகாக வரையுமிவர், வெற்றி பெற்ற
வாட்குறிப்புப் பாக்களையும் பாடி யுள்ளார்
மன்மதளச் சில்களையும் சாடி யுள்ளார்!
தோட்குறிப்புக் கவியரசர் தமது நூலில்
சூரியனை நெற்றிப்பொட் டாக்கி யுள்ளார்!

மலர்மகனின் ‘நீர்வீழ்ச்சி’ என்னும் பாடல்
மற்றவரை வெல்லுகின்ற பாட லாகும்!
‘நிலந்தழுவி நீண்டுவரும் நீரின் வேரே,
நெருப்பின்றி மிதக்கின்ற புகையே!’ என்று
பலர்புகழத் தக்கபடி வருணித் துள்ள
பாடலிதை ஆங்கிலத்தில் மொழிபெ யர்த்தால்
அலைகடல்சூழ் உலகத்தில் இவரின் கீர்த்தி
அன்றாடம் உலவிக்கொண் டேயி ருக்கும்!

சத்துணவாம் பாயசத்தைச் சுஜாதா என்பாள்
தரணிமெச்சும் புத்தருக்குத் தந்த தாலே
புத்தபிரான் வரலாற்றில் இடம்பெற் றிட்டாள்!
‘பூமிக்குப் புதியதிசை’ என்ப தான
சத்துச்சிந் தனைக்கவிதைப் புத்த கத்தைத்
தந்திருக்கும் காரணத்தால் மாந்தர் போற்றும்
முத்திரைப்பொன் ஆகிவிட்டார்! இனிமேல் இந்த
முதல்நூலே இவருக்குப் பெருமை சேர்க்கும்!

---

*ஒவியக்கவிஞர் மலர்மகன் எழுதிய ‘பூமிக்குப் புதிய பாதை’ என்னும் நூலுக்கு 1994 - இல் வழங்கிய அணிந்துரை.*

# திறவுகோல்

ஆறுவிரல் ஆறுமுக சாமி என்னும்
அன்பரொடு பயின்றவன்நான்; புதிதாய் இங்கோர்
ஆறுவிரல் உடையதமிழ்ப்புலவ ரான
அய்ம்பொறியார் இயற்றியுள்ள கவிதை நூலை
நூறுமுறை நான்படித்து மகிழ்ந்தேன். செய்யுள்
நுட்பத்தைப் பிறரிடத்தில் எடுத்து ரைத்தேன்.
மாறுபடாச் சிந்தனைகள் சந்திக் கின்ற
மறுமலர்ச்சிப் பாடல்களின் தொகுப்பே இந்நூல்.

துறவுகோல் ஆசைகளை அறுக்கும். நல்ல
துலாக்கோலோ பண்டத்தை நிறுக்கும். வாழ்க்கை
உறவுகோல் சமூகத்தைச் சேர்த்து வைக்கும்
ஊன்றுகோல் முதியோருக் குதவி செய்யும்.
அறிவுகோல் அறியாமை தன்னை நீக்கும்
அய்ம்பொறிஎன் னும்புலவர் வழங்கி யுள்ள
திறவுகோல் புதுமைகளைத் திறக்கும். இந்தத்
திறவுகோல் இவருக்குப் பெருமை சேர்க்கும்.

---

■ *புலவர் அய்ம்பொறி எழுதிய 'திறவுகோல்' என்னும் கவிதை நூலுக்கு 1994 - இல் வழங்கிய அணிந்துரை.*

# தேசகுருவின் சல்லிவேர்கள்!

காசுகவி யாரென்றால் அவன்தான் கம்பன்;
கண்டனக் கவிஅவன் தான்; ஒட்டக் கூத்தன்;
ஆசுகவி யார்?அவன்தான் காள மேகம்,
அலங்காரக் கவிஅவன்தான் கடிகை முத்து;
மாசற்ற திருநாடாம் மலேசி யாவின்
மறுமலர்ச்சிக் கவிஞர்களுள் ஒருவ ரான
பாசமிகு தேசகுரு அவர்யார் என்றால்
பாவேந்தர் பரம்பரைக்குச் சொந்தக் காரர்!

தேசத்தைக் குருவாக மதித்துப் போற்றும்
தேசகுரு, கவிதைகளால் எழுதி யுள்ள
சாசனமாம் சல்லிவேர்கள் என்னும் நூலைத்
தமிழ்விளக்கு வெளிச்சத்தில் படித்துப் பார்த்தேன்
யோசித்துப் பாருங்கள் என்று கூறும்
யோசனைகள் அனைத்தையும்நான் வரவேற் கின்றேன்!
பூசிக்க விரும்பாத இவரின் பாட்டுப்
புதுமைகளை எண்ணிஉளம் பூரிக் கின்றேன்!

இவருடைய புத்தகமாம் சல்லி வேர்கள்,
இலக்கியத்தைக் காப்பாற்றும் ஆணி வேர்கள்
சிவபெருமா னின்கிருபை வேண்டு மென்று
தியாகராஜ பாகவதர் பாடி யுள்ளார்
இவருடைய கவிக்கிருபை வேண்டு மென்றே
எல்லோரும் பாடுங்கள், பாராட்டுங்கள்,
இவருடைய புத்தகத்தை வாசி யுங்கள்
இவரைப்போல் கவிஎழுத முன்வா ருங்கள்.

"விதியை நொந்து கொள்ளும்
விவரம் கெட்ட உலகில்
புதிய நிலையைக் காண
புதுமை செய்யும் இயல்பை
மதிக்கத் தெரிய வேண்டும்
மனிதன் நாளும் வாழ்வில்
அதிகம் படித்து! அறிவை
அதிக மாக்கு இங்கே!

ஆறு அறிவு நமக்கு
அதையே வைத்துப் பெருக்கு
வேறு சிலரைக் கண்டால்
வழியை மாற்று உடனே
மாறு படவே இவைகள்
மனித நிலைக்கு ஏற்று
நேராய்க் கோடு போட்டால்
நிலைமை மாறும் அங்கே!"

சொல்வெட்டாய் இருக்கின்ற இந்தப் பாட்டைச்
சுயமரியா தைக்கவிஞர் தம்மில் லத்தில்
கல்வெட்டாய் வைக்கட்டும், வைப்பா ராயின்
கவிஞர்புகழ் மேலோங்கும், கவிஞ ரெல்லாம்
பல்லவிபோல் முன்நிற்க வேண்டு மென்னும்
பாசத்தால் இவர்க்கிதனைக் கூறு கின்றேன்.
நல்லகவி தேசகுரு மேலும் மேலும்
நன்னூற்கள் பலஎழுதிப் புகழ்பெறட்டும்!

---

■ *கவிஞர் வெ. தேசகுரு எழுதிய 'தேசகுருவின் சல்லிவேர்கள்' என்னும் நூலுக்கு 1995 - இல் வழங்கிய அணிந்துரை.*

# கோம்பாக் ஆறு

தீப்பொறி பொன்னு சாமி
சிறந்தசீர் திருத்த சாமி
காப்பியம் படைக்கும் சாமி
கம்பனை அதட்டும் சாமி
வாய்ப்பினை எதிர்பார்க் காமல்
வாழ்கின்ற சாமி! வானம்
கூப்பிடும் நிலவின் மீது
கொடியேற்ற நினைக்கும் சாமி!

தீவேந்தும் கடலைப் பற்றி
சிறப்பாகப் பாடல் யாத்த
பாவேந்தர் மரபில் வந்த
பாவலர் இவரைப் பற்றி
மூவேந்தர் முத்தும் நானும்
முன்னரே அறிவோம்; பாட்டுப்
பூவேந்தும் சாமி நீண்ட
புகழேந்தி வாழ்வா ராக!

---

■ கவிஞர் தீப்பொறி பொன்னுசாமி எழுதிய 'கோம்பாக் ஆறு' என்னும் கவிதைத் தொகுப்பு நூலுக்கு 1996 - இல் வழங்கிய வாழ்த்துரை.

# தூண்டில் !

சென்னையிலே தமிழ்க்கவிஞர் பெருமன் றத்தார்
சீருடனே அமைத்த "முதல் கவிய ரங்கில்"
என்னுடைய தலைமையிலே "கல்"லைப் பற்றி
எழிற்கவிஞர், புலவர்பலர் பாட லானார்.
கன்னிக்கவி யரங்கமதாம் அவ்வ ரங்கில்
"கல்"பற்றிக் "கவிஞர்இசை தாசன்" அன்றே
நன்முறையில் கவிதையினை வழங்கக் கேட்டேன்
நானன்றே பாராட்டி வாழ்த்தும் சொன்னேன்.

தான்பெற்ற திறத்தாலும், நற்பண் பாலும்,
தளராத உழைப்பாலும், கவிதை வானில்
மேன்மேலும் இசைதாசன் மெருகு பெற்றே
மேடைபல கண்டுயர்வாய் மிளிரு கின்றார்.
தேன்கவிதை படைத்துவரும் இக்க விஞர்
திறமையுடன் ஆலந்தூர் கவிதை வட்டம்
ஈன்றிட்ட "முதற்பரிசை"த் தூண்டில் போட்டே
இழுத்திட்டார் அதுவேஇத் "தூண்டில் நூலாம்"

மயக்கங்கொள் ளாத"மதுராந்த கத்தில்"
"மழலைக்கவி யரங்கம்" ஒன்றை அரசு சார்பில்
செயல்வீரர் "மெய்யப்பர்" அமைத்த போது
சிறப்பாக "மழலையொரு கொடுமை" என்னும்
நயமான தலைப்பில்என் தலைமை தன்னில்
நனிபாடிப் பாராட்டைப் பெற்ற அன்பர்
உயர்ந்தகவி இசைதாசன் உருவத்தோடு
உளத்தினிலும் உயர்ந்தவரே! ஐய மில்லை.

என்றன்சொல் ஏற்றிட்டே "சேக்கி ழார்" தம்
இனிதான வரலாற்றுச் சரித்தி ரத்தை
நன்முறையில் எண்சீரில் நூலாய்த் தந்தும்,
நத்தம்எனும் குன்றத்தூர் பிறந்த செம்மல்
முன்னாளின் முதலமைச்சர் சேக்கி ழாரின்
முன்பு"சிலைக் கவியரங்கம்" தனைய மைத்தும்
என்தலைமை ஏற்றிட்ட "இசைதா சர்க்கு"
என்னிதய நல்வாழ்த்து என்று முண்டு!

நாடுபல இவர்சென்று வந்த தாக
நானறிந்த வரைசெய்தி ஏது மில்லை
ஏடுபல இவர்கவிதை கண்ட துண்மை
எல்லோரும் அறிந்ததுவே! இவர்தம் வாழ்வில்
மேடுபள்ளம் பலகண்டும் அயர்ந்தி டாமல்
மேன்மேலும் முயன்றுவெற்றி இலக்கை எட்டப்
பாடுபட்டே உயர்ந்தநிலை அடைந்த அன்பர்
படைப்பிதனைப் பாராட்டி வாழ்த்து கின்றேன்!

---

■ *தமிழ்மாமணி கோவூர் இசைதாசன் எழுதிய 'தூண்டில்' என்னும் நூலுக்கு 1998 - இல் வழங்கிய அணிந்துரை.*

# தமிழின முழக்கம்!

தடுமாற்றம் இல்லாக் கொள்கை
தன்நெஞ்சில் பதியம் போட
இடமாற்றம் தேடா தோழர்
இலட்சிய விழுது நூலே!
உடைமாற்றிக் கரைவேட் டிக்குள்
உட்பட்டுத் தலையை ஆட்டும்
நடைமாற்ற மின்றி வாழ
நாற்றங்கால் இந்த நூலே!

அறிவினை தெய்வ மென்றே
அறிந்தவர் தம்மை மாற்றி
இறைவனைத் தேடி வீழ்ந்தே
இருகாலின் முழகால் தேய
நிறைபக்தி கொள்வார் உண்டு
நிச்சயம் அன்னார் மேலே
உறைந்துள்ள மடமை நீங்க
ஒளியேற்ற உதவும் இந்நூல்!

பதவிகள் சுகத்தில் ஆடி
பாமரர் தனைஏ மாற்றி
உதவியைப் பெற்றே ஆட்சி
உயரத்தில் நிற்கும் சூழ்ச்சிக்
கதையினை உரித்துக் காட்டும்
கருத்தொளித் தொகுப்பாம் இந்த
முதல்நூலே முத்து முத்தாய்
முத்திரை பதித்த நூலே!

தமக்குள்ளே வேறு பாடா?
தமிழனே உணர்க, இந்த
சமுதாயச் சந்தைக் குள்ளே
சாதியை விரிப்போர் தம்மை
அமுதாய தமிழ மண்ணில்
அச்சாதி வேரைக் கொய்ய
உமிக்குள்ளே தீயைப் போன்று
உருவான கவிதை யாகும்.

பெண்மையை அடிமை யாக்கிப்
பேயெனப் பட்டம் சூட்டும்
கண்மைபோல் கருத்த நெஞ்சர்
கண்களைத் திறக்கும் பாட்டும்,
உண்மையின் உணர்ச்சி யாலே
உருவான கவிதை நூலே!
எண்ணிநாம் ஆய்ந்து பார்த்தால்
இதிகாச நோயை நீக்கும்.

ஒருமொழித் திட்டம் ஒன்றே
உயர்வான திட்டமாகும்
இருமொழித் திட்டங் கூட,
ஏமாற்று வேலை என்று
தருமெழிற் கவிதை தந்து
தாய்மொழிப் பற்றைக் காட்டி
உரமிகும் கொள்கை ஏந்தி
உயர்கின்றார் சின்ன ராசு!

---

■ *பாவலர் ப. சின்னராசு எழுதிய 'தமிழின முழக்கம்' என்னும் நூலுக்கு 1998 - இல் வழங்கிய அணிந்துரை.*

# மனிதநேய மாமணி மல்லைமணிவாசகம்!

மாணிக்க வாசகனார் திருவா ரூரார்
மணியான திருவாசகம் நூலை யாத்தார்!
மாணிக்கச் சிந்தனைக்குச் சொந்தக் காரர்
மணிவாச கக்கவிஞர் என்றன் நண்பர்!
கோணிக்கொண் டிருக்கின்ற சமுதா யத்தின்
கூனல்தனை நிமிர்த்துதற்குக் கவிதை யாத்தார்!
'மாணிக்கப் பரல்கள்'பல நமக்க ளித்தார்!
மாவுலகம் ஒளிபெறவே உழைக்கும் கோமான்!

மாணிக்க வாசகனார் அமைச்ச ராகி
மதுரையிலே பாண்டியர்க்குத் துணையாய் நின்றார்!
'மாணிக்கப் பரல்' தந்த மணிவா சகமும்
மத்தியமீன் வளத்துறையில் அதிகா ரியானார்!
மாணிக்க வாசகனார் திருவா சகத்தால்
மாவுலகில் புகழ்பெற்றார்; நிலைத்து நின்றார்!
மாணிக்கவாசகனார் போன்றே, மல்லை
மணிவாசகம் கவிதையாலே புகழைப் பெற்றார்!

பாவேந்தர் பரம்பரையில் நானி ருந்தேன்
பாவலர்நம் மணிவாசகம் இரண்டாம் சுற்றுப்
பாவேந்தர் பரம்பரையில் இருக்கக் கண்டேன்!
பாரினிலே பெரும்புகழைக் குவிக்கக் கண்டேன்!
பூவேந்தும் தேன்கவிதைக் கல்வெட் டாக்கிப்
புரட்சியொன்று தான்செய்தார் உலகம் போற்ற!
பாவேந்தர் போன்றிவரும் தமிழில் நல்ல
பாப்புனைந்து புகழ்குவித்து நீடு வாழ்க!

---

■ *சிதம்பரம் தொகுத்து வழங்கிய 'மனிதநேய மாமணி மல்லை மணிவாசகம்' என்னும் நூலுக்கு 1998 - இல் வழங்கிய வாழ்த்துப்பா.*

# பெரியார் பாட்டு!

ஆரியத்தைப் பெரியார்போல் எதிர்த்து நிற்கும்
அரும்பாவூர் குறளன்பன் அளிக்கும் பாட்டு
வீரியத்தில் குறையாத வெற்றிப் பாட்டு!
வேரோடு மடமையினை வீழ்த்தும் பாட்டு!
காரியத்தை, காரணத்தை அலசிப் பார்த்துக்
கடைப்பிடிக்கத் தூண்டுகிற கேள்விப் பாட்டு!
நேரான நம்பெரியார் பாட்டுத் தந்த
நெருப்புநிலாக் கவிஞனைநான் வாழ்த்து கின்றேன்!

---

■ *புலவர் குறளன்பன் எழுதிய 'பெரியார் பாட்டு' என்னும் நூலுக்கு 1999 - இல் வழங்கிய அணிந்துரை.*

# கலைமதியன் கவிதைகள்!

தனிப்பாடல் திரட்டைப்போல் சிறப்பு மிக்க
தமிழ்ப்பாடல் திரட்டின்நூல். இந்த நூலில்
பனிப்பாடல், இளவேனில் இன்பப் பாடல்,
படித்தவுடன் நெஞ்சத்தில் பதியும் பாடல்,
கனிப்பாடல், சீர்திருத்தக் கருத்துப் பாடல்,
கயவர்களை நல்வழிக்குத் திருப்பும் பாடல்,
மனப்போக்கை வெளிப்படையாய்க் காட்டும் பாடல்,
மறுமலர்ச்சிப் பாடல்களைக் காணலாம் நாம்.

சீர்காழி 'கண்ணுடைய வள்ளல்' என்பார்
தீட்டியநூ லாம்'ஒழிவில் ஒடுக்கம்' என்னும்
பேர்பெற்ற நூலதனை இராம லிங்கப்
பெருந்துறவி எடுத்தெடுத்துப் படிப்ப துண்டாம்.
ஆர்வமுடன் 'கலைமதியன் கவிதை' நூலை
அன்றாடம் எடுத்தெடுத்துப் படிப்போ மாயின்
சீர்பெறலாம், பயன்பெறலாம், நாமெல் லோரும்
சிந்திக்கும் ஆற்றலையும் பெறலாம் என்பேன்.

எத்தனையோ தவம்செய்தார் இந்த நாட்டில்
இருந்தார்கள், இப்போதும் இருக்கின் றார்கள்.
கத்துகடல் தனைப்பார்த்து மகிழும் இந்தக்
கவியரசர் கவிதைஎன்றன் தவமென் கின்றார்.
பத்துக்கு மேலாடை, பதினொன் றென்னம்
பாட்டெழுத நான்கூடத் தவமி ருந்தேன்!
முத்தான கவியைஇவர் தருவ தற்கு
முன்னோட்டம் இவர்கவிதைத் தவமே யாகும்.

மேடையிலே கவிபாடிப் புகழைப் பெற்ற
வித்தகராம் இவருடைய நூலி லுள்ள,
'தேடலெ'னும் கவிதையைநாம் படிப்போ மாயின்
தெளிவுவரும், இவரைப்போல் நம்மெல் லோர்க்கும்
தேடுவதற் காசைவரும், ஆசை வந்தால்
சிறப்பான கவிதைவரும். எனவே நீங்கள்
ஏடுகளைத் தேடுங்கள், 'தேடல் பாடல்'
எழுதுதற்கு முயலுங்கள் இவரைப் போலே.

அன்றுமுதல் இன்றவரை வள்ள லாரின்
அருட்பாவைப் படித்துக்கொண் டிருக்கும் என்னை
நன்றாக இவர்கவிதை ஈர்த்த தாலே
நண்பர்களே, நானொன்று கூறு கின்றேன்,
சன்மார்க்க சங்கத்தைத் தோற்று வித்த
தமிழத்துறவி இராமலிங்க அடிகள் பற்றித்
தன்மானக் கலைமதியன் இயற்றி யுள்ள
தமிழ்க்கவியை நாடெங்கும் பரப்ப வேண்டும்.

நண்பர்களுக் குதவிவந்த வீரா சாமி
நாயுடென்பார், ராஜமன்னார் குடியில் வாழ்ந்த
பண்பட்ட பெருங்கவிஞர் ஆவார், அந்தப்
பாவலரோ விதவையரின் துயரைப் பற்றி,
எண்பத்தைந் தாண்டுகட்கு முன்பே பாக்கள்
இயற்றிஒரு நூலதனில் வெளியிட் டுள்ளார்!
கண்ணீரைச் சிந்திவரும் விதவை பற்றிக்
கலைமதியன் இப்போது பாடி யுள்ளார்.

காவியத்தின் சேமிப்பே பாக்க ளாகும்,
கருத்துகளின் சேமிப்பே சொற்க ளாகும்,
பூவுலகின் சேமிப்பே உயிர்க ளாகும்,
புகழ்பெற்றோர் சேமிப்பே வரலா றாகும்,
தாவரத்தின் சேமிப்பே கனிக ளாகும்,
தண்ணீரின் சேமிப்பே தடாக மாகும்,
மூவருலா போற்சிறந்த இவரின் நூலோ
மூளையிலே குடியேறும் பாக்க ளாகும்.

'கார்டுட்ச்சி' இத்தாலி நாட்டுக் காரர்
காவியமொன் றெழுதியதால், உலகம் தன்னில்
பேர்பெற்றார், அவர்நோபல் பரிசு பெற்றார்.
பெருமைபெற்ற அக்கவிஞர் பிறந்த நாளும்
ஊர்புகழும் கலைமதியன் பிறந்த நாளும்
ஒன்றாக இருப்பதனால் நான்சொல் கின்றேன்
பேர்பெற்ற அந்நோபல் பரிசு தன்னை
பெற்றாலும் இவர்பெறலாம் எதிர்கா லத்தில்.

‘கலைமதியன் கவிதைகள்’என் கின்ற இந்த
கவிதைநூல் இவருடைய முதல்நூ லாகும்.
குலைவாழை எனச்சிறந்த இந்த நூலே
குன்றாத கவிச்சிறப்பிற் கெடுத்துக் காட்டு.
நிலைபேறாய் இவர்புகழை இதுவே சொல்லும்.
நீளுலகில் இவர்பெயரோ நிலைத்து வாழும்.
கலைஞானி கலைமதியன் கவிதை வெல்க!
“கவிஞானி” பட்டத்தைத் தந்தேன் வாழ்க!

---

■ *கவிஞர் கலைமதியன் எழுதிய ‘கலைமதியன் கவிதைகள்’ என்னும் நூலுக்கு 2000 - இல் வழங்கிய அணிந்துரை.*

# பெருங்கவிஞர் நே.ஆ. பூபதி கவிதைகள்!

பேரறிஞர் அண்ணவைக் கலைஞர் தம்மைப்
பின்பற்றித் தொண்டுசெய்து கொண்டி ருக்கும்
ஊரறிந்த பெருங்கவிஞர் தம்மைப் பற்றி
ஓங்குபுகழ்க் குரியபூ பதியைப் பற்றிப்
பாரிலுள்ளோர் பலரறிவர்! இவர்யார் என்றால்
பாவேந்தர் பரம்பரைக்குச் சொந்தக் காரர்!
ஈரநிலா இவர்நெஞ்சம்! காவி யங்கள்
இயற்றுவதில் இவர்மிகவும் கெட்டிக் காரர்!

கதைஎழுதிக் கட்டுரைகள் எழுதிப் பின்னர்
கவிஎழுதத் தொடங்கியநான் புகழ்பெற் றுள்ளேன்!
இதைப்போன்றே பூபதியும் எழுதி இன்றோ
இவ்வுலகில் புகழ்பெற்று விளங்கு கின்றார்!
நதிக்கவிதை இவர்கவிதை; சமுதா யத்தை
நன்றாகச் சீர்திருத்தும் கவிதை யாகும்.
விதைக்கவிதை எழுதிவரும் இவரோ, என்றும்
வீண்கவிதை எழுதுவதே இல்லை என்பேன்!

இவர் பெயரைத் தாங்கிவெளி வந்தி ருக்கும்
 இந்நூலை நான்படித்து மகிழ்ச்சி யுற்றேன்.
சுவைநோக்கில் சுரதாஎன் கின்ற நூலைத்
 தோழர்அரூர் மணிவேலன் எழுதி யுள்ளார்.
அவரிடத்தில் இந்தநூல் போய்ச்சே ரட்டும்
 ஆராய்ச்சி செய்யட்டும் நன்மை கிட்டும்!
கவிவேந்தர் பூபதியார் இந்த நூலைக்
 கண்ணாடி வெண்ணிலவில் அரங்கேற் றட்டும்.

---

■ பெருங்கவிஞர் நெ.ஆ.பூபதி எழுதிய 'பெருங்கவிஞர் நெ.ஆ.பூபதி கவிதைகள்' என்னும் நூலுக்கு 2000 - இல் வழங்கிய அணிந்துரை.


# சாமி பழனியப்பன் கவிதைகள்!

புகழ்க்கன்னி பூப்படைந்த கவிதை நூலில்
புதுப்பார்வை; புதியசுவை சுரக்கக் கண்டேன்!
புகழணிந்த புகழேந்தி வெண்பா வைப்போல்
பூத்திருக்கும் உவமைகளின் நயத்தைக் கண்டேன்!
திகழ்தமிழின் மரபுவழிப் பரம்ப ரையின்
திரைகடல்போல் விரித்துரைக்கும் திறமை கண்டேன்.
புகைகிழித்து வெளிக்கிளம்பும் ஒளியைப் போல
புகழ்பெற்று வரும்சாமி பழனி யப்பன்.

பாவேந்தர் பரம்பரையின் மூத்த சாமி!
பகுத்தறிவை விளைவிக்கும் பாட்டுபூமி!
பூவேந்தும் தேனடையின் கவிப்பாட் டாளி!
பெதுவுடைமை மூச்சுக்கும் இவர்கூட் டாளி!
நாவேந்தும் சொல்லையெல்லாம் சலவை செய்து
நன்னெறியைப் பாடுகுயில் பழனி யப்பன்!
நீ!வாழ்க! இலக்கியம்போல் நின்று வாழ்க!
நெருங்கிவரும் முதுமையினை வென்று வாழ்க!

---

■ *கவிஞர் சாமி பழனியப்பன் எழுதிய 'சாமி பழனியப்பன் கவிதைகள்' என்னும் நூலுக்கு 2002 - இல் வழங்கிய அணிந்துரை.*



என்மொழி தமிழே ! அந்த
எழில்மொழி அறிவின் ஆக்கம் !
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி தேனின் தேக்கம் !
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி எனக்குத் தாய்ப்பால் !
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி புகழின் போர்வை !